Safare Sunnah

safare sunnah.com

A JOURNEY TOWARDS SUNNAH....

சுவனப் பூஞ்சோலையில் பூமான் நபியின் புனிதப்பெற்றோர்

WWW.SAFARESUNNAH.COM

ஆசிரியர்
மௌலவி அல்ஹாஜ் அல்ஹாபிழ்
அப்ஸலுல்உலமா
M. ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி *M.A.,*

தலைவர்
சுன்னத் ஜமாத் ஐக்கியப் பேரவை

வெளியீடு
குப்ரா மஜீத் பதிப்பகம்
மஸ்ஜித் முபாரக்
16, பில் கிங்டன் ரோடு
அயனாவரம், சென்னை 23
98411 11367

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

நூ-ன் பெயர் : சுவனப் பூஞ்சோலையில் பூமான் நபியின் புனிதப்பெற்றோர்

பக்கம் : 88

மொழி : தமிழ்

ஆசிரியர் : M.ஷைகு அப்துல்லாஹ் ஜமா- M.A.,

முகவரி : மஸ்ஜித் முபாரக்
16- பில்கிங்டன் ரோடு,
அயனாவரம்,
சென்னை - 23.
98411 11367

முதல் பதிப்பு : மார்ச் 2008

பிரதிகள் : 3000

இரண்டாம் பதிப்பு: மே 2008

பிரதிகள் : 2000

விலை : ரூ. 20

உரிமை : ஆசிரியருக்கே

அச்சு அமைப்பு : பஹீமிய்யா பப்ளிஷர்ஸ்

Type Setting By :
FAHEEMIYA PUBLISHERS
75, G.S.T. Road,
K.M. Complex,
Guduvancheri.

சமர்ப்பணம்

அகிலத்தின் அருட்கொடையாக

அவனிக்கு வந்து

அறியாமை இருளை அகற்றி

அறிவொளியைப் புகட்டிய

என் உயிரின் உயிர்

கண்மணி நாயகத்திற்கும்

அவர்தம் அன்புத் தாயார் ஆமினா

அருமைத் தந்தையார் அப்துல்லாஹ்

ஆகியோருக்கும்

இந்நூல்

காணிக்கை.

WWW.SAFARESUNNAH.COM

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

இந்நூல் உள்ளவை

- முன்னுரை
- திருகுர்ஆன் வசனங்கள்
- இறைத்தூதர் பொன்மொழிகள்
- விவாதங்கள் - விளக்கங்கள்
- ஃபத்ரத் காலம் - ஒருவிளக்கம்.
- எச்சரிக்கை
- பெருமானார் பெற்றோர் பற்றிய நூல்கள்
- ஒரு கேள்வி
- பகிரங்க சவால்

முன்னுரை

அனைத்துப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கு.

ஸலாத்தும் சலாமும் அவனின் திருத்தூதர் முஹம்மது முஸ்தஃபா **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்மீதும் அவர்களின் உற்றார் உறவினர் மற்றும் உற்ற தோழர் அனைவர் மீதும் என்றென்றும் நிலவட்டுமாக!**

அன்பு இதயங்களே!

அஸ்ஸலாமு அலைக்கும்.

உலகை உய்விக்க வந்த உத்தம நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது இலக்கை அடைந்திட அரும்பணியாற்றினார்கள். நேர்வழிகாட்டி மக்களை நல்வழிப்படுத்திட அயராது உழைத்து அதன் வெற்றிக்கனியையும் பரித்தார்கள்.

அகிலத்தின் அருட்கொடை அண்ணலெம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மூலமாக கோடானு கோடி மக்கள் நேர்வழி பெற்று சுவனம் பிரவேசிக்கிற நல்வாய்ப்பை அடைந்துள்ளார்கள்.

உண்மை இவ்வாறிருக்க, பெருமானாரின் பெற்றோர் நரவாசிகளென்று கொஞ்சமும் நாகூசாமல் சிலர் கூறுகிறார்களென்றால் இது சமுதாயத்தின் சாபக்கேடு என்றுதான் சொல்ல முடியும்.

பலரின் பார்வைக்கு நிறைமட்டுமே

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

தெரிகின்றபோது சிலரின் பார்வைக்கு குறை மட்டுமே தெரிவது ஏனென்று புரியவில்லை. இப்பார்வைக் கோளாறு நம் உயிரினும் மேலான கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெற்றோர் விஷயத்திலும் சிலரிடமிருந்ததை நாமறிந்தபோது நெஞ்சம் கனத்தது.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெற்றோர் இறைமறுப் பாளர்களென்று கூறி நாயகக்கண்மணியின் உள்ளத்தை நோவினைப்படுத்தும் தீயசெயலை எவரும் புரிந்துவிடக்கூடாது. ஆகவேதான், பெருமானாரின் அன்புத் தாயாரும் அருமைத் தந்தையாரும் சுவனத்து நறுமலர்கள் என்பதை மறை மொழியிலும் மாநபி வழியிலும் தமிழ் கூறும் இஸ்லாமிய உலகிற்கு விளக்கிடவேண்டுமென விழைந்து இந்நூலை உருவாக்கினேன்.

இந்நூ-ல் சான்றுகளாகக் காட்டப்பட்டுள்ள குர்ஆன் வசனங்கள் மற்றும் நபி மொழிகளைத்தையும் அரபி மூலத்துடன் இடம் பெறச்செய்துள்ளேன். ஆனால், திரும்பச் சொல்கிற இடத்தில் மொழிபெயர்ப்பை மட்டுமே கொண்டு வந்துள்ளேன். அதன் அரபி வாசகத்தை அது கூறப்பட்டுள்ள வேறு இடத்தில் கண்டு கொள்ளுமாறு அன்புடன் கோருகிறேன்.

இந்நூலை சமைப்பதில் பல்வகைகளில் எனக்கு ஆக்கமளித்த,

★மௌலவி அல்ஹாஃபிழ் M.முஹ்யித்தீன் ஜமா-ஆமிரீ

★ A.சையித் கௌஸ் மதனீ ஆமிரீ

ஆகியோருக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினை சமர்ப்பிக்கிறேன்.

இந்நூலை வாசிப்பதின் வழியாக அண்ணலார்மீது நாம் கொண்டிருக்கிற அன்பும், பாசமும் மற்றும் நேசமும் பன்மடங்கு பெறுகிட இறைவனை வேண்டுகிறேன். இந்நூலைப் படித்து காய்தல் உவத்த-ன்றி உண்மையை ஏற்று மறுமை வெற்றியைப்பெற்றிட மாற்றுக்கருத்துள்ளோரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நல்வழிகாட்ட இறைவன் போதுமானவன்.

வஸ்ஸலாம்

சென்னை — உங்கள் அன்பன்

15-5-2008 — M.ஷைகு அப்துல்லாஹ் ஜமா-

திருக்குர்ஆன் வசனங்கள் :

وَجَعَلَهَا كَلِمَةً بَاقِيَةً فِيْ عَقِبِهِ (الزخرف : ٢٨)

(1) **மேலும், (இப்ராஹீம்) தமக்குப் பின் தம் வழித் தோன்றல்களிடம் நிலையான வார்த்தையை விட்டு விட்டுச் சென்றார்.** (அல்குர்ஆன் 43:28)

عَنْ قَتَادَةَ (وَجَعَلَهَا كَلِمَةً بَاقِيَةً) قَالَ شَهَادَةُ اَنْ لَاإِلٰهَ اللّٰهُ وَالتَّوْحِيْدُ لَمْ يَزَلْ فِيْ ذُرِّيَّتِهِ مَنْ يَقُوْلُهَا مِنْ بَعْدِهِ

(تفسير الطبري ٢١/٥٨٩)

மேற்கண்ட வசனத்திலுள்ள க-மா என்பதின்பொருள் லாயிலாஹ இல்லல்லாஹ் என்பதாகும். இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மறைவிற்குப் பின் இக்க-மாவைச் சொல்லக்கூடியவர்கள் அவர்களுடைய பிள்ளைகளில் இருந்து கொண்டேயிருப்பார்கள்.

அறிவிப்பாளர் : கதாதா ரழியல்லாஹு அன்ஹு
நூல் : தஃப்ஸீர் தப்ரீ 21/589

قَالَ: قَتَادَةُ : لَايَزَالُ مِنْ عَقِبِهِ مَنْ يَعْبُدُ اللّٰهَ اِلٰى يَوْمِ الْقِيَامَةِ

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப்பிறகு அல்லாஹ்வை வணங்கக்கூடியவர்கள் கியாமத் நாள் வரை இருந்துகொண்டே இருப்பார்கள்.

அறிவிப்பாளர் : கதாதா ரழி யல்லாஹு அன்ஹு
நூல் : தஃப்ஸீர் குர்துபீ 16/77

இப்னு அப்பாஸ், இக்ரிமா, முஜாஹித், ளஹ்ஹாக் போன்றோரும் மேற் கூறப்பட்ட கருத்தையே கூறியுள்ளார்கள்.
(தஃப்ஸீர் இப்னு கஃதீர் - 7/225)

وَاِذْ قَالَ اِبْرَاهِيْمُ رَبِّ اجْعَلْ هٰذَا الْبَلَدَ آمِنًا وَاجْنُبْنِيْ وَبَنِيَّ اَنْ نَعْبُدَ الْاَصْنَامَ (ابراهيم : ٣٥)

(2) **இப்ராஹீம் பிரார்த்தனை செய்ததை நினைத்துப்பாருங்கள்! என் இறைவனே! (மக்காவாகிய) இந்நகரத்தை அச்சமற்றதாக ஆக்குவாயாக! என்னையும் என் பிள்ளைகளையும் சிலைகளை வணங்குவதி-ருந்து காப்பாற்றுவாயாக!** (அல்குர்ஆன் 14:35)

عَنْ مُجَاهِدٍ (واذ قال ابراهيم رب اجعل هذا البلد آمنا واجنبني وبني ان نعبدالاصنام) قَالَ فَاسْتَجَابَ اللّٰهُ لِاِبْرَاهِيْمَ دَعْوَتَهُ لِوَلَدِهِ قَالَ فَلَمْ يَعْبُدْ اَحَدٌ مِنْ وَلَدِهِ صَنَمًا بَعْدَ دَعْوَتِهِ (تفسير الطبري١٧/١٧)

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பிரார்த்தனையை இறைவன் அங்கீகரித்து விட்டான். எனவே, அவர்களின் இப்பிரார்த்தனைக்குப்பிறகு அவர்களுடைய பிள்ளைகளில் எவரும் சிலையை வணங்கவில்லை.

அறிவிப்பாளர் : முஜாஹித் ரழியல்லாஹு அன்ஹு
நூல் : தஃப்ஸீர் தப்ரீ 17/17

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

رَبِّ اجْعَلْنِي مُقِيمَ الصَّلَاةِ وَمِنْ ذُرِّيَّتِي (ابراهيم : ٤٠)

(3) என் இறைவனே! என்னையும் எனது வழித்தோன்றல்களில் சிலரையும் தொழுகையை நிலை நாட்டக்கூடியவர்களாக ஆக்குவாயாக!

(அல்குர்ஆன் 14:40)

عَنِ ابْنِ عَبَّاسٍ قَالَ: لَايَزَالُ مِنْ وَلَدِ اِبْرَاهِيمَ نَاسٌ عَلَى الْفِطْرَةِ اِلَى اَنْ تَقُوْمَ السَّاعَةُ (تفسير النسفي ٢/١٢٨)

இப்ராஹீம் அலைஹிஸ்ஸாலம் அவர்களின் வழித்தோன்றல்களில் சிலர் இயற்கை மார்க்கமான இஸ்லாத்தில் (கியாமத்) இறுதி நாள் வரை இருந்து கொண்டேயிருப்பர்.

அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு
நூல் : தஃப்ஸீர் நஸஃபீ - 2/127

மேற்கண்ட வசனங்களின் அடிப்படையில்,
-ஏகத்துவ க-மாவை மொழிதல்
-சிலைவழிபாட்டி-ருந்து தவிர்ந்து கொள்ளுதல்
-தொழுகையை நிலை நாட்டுதல்.

இம்மூன்றையும் செய்தவர்கள் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வழித் தோன்றல்களில் நிச்சயம் சிறந்தவர்களாகத்தான் இருக்கவேண்டும். இம்மூன்று நல்லறங்களை நிறை வேற்றாதவர்களுக்கு சிறந்தவர் என்று கூறமுடியாது.

இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வழித்தோன்ற-ல் சிறந்தோராக எவர் இருந்தனர் என்பதை அடுத்துவரும் ஹதீஃத்கள் தெரிவிக்கின்றன.

عَنْ اَبِي هُرَيْرَةَ قَالَ قَالَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: بُعِثْتُ مِنْ خَيْرِ قُرُوْنِ بَنِي آدَمَ قَرْنًا فَقَرْنًا حَتّٰى كُنْتُ مِنَ الْقَرْنِ الَّذِي كُنْتُ مِنْهُ. (رواه البخارى)

இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:**

ஆதமுடைய பிள்ளைகளில் தலைமுறை தலைமுறையாக இப்போது நானிருக்கும் தலைமுறை வரை சிறந்தோர் வழியாக நான் அனுப்பப்பட்டேன்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு
நூல் : புகாரீ எண் : 3293

عَنْ اَنَسٍ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : مَا افْتَرَقَ النَّاسُ فِرْقَتَيْنِ اِلَّا جَعَلَنِيَ اللّٰهُ فِي خَيْرِهِمَا

(رواه البيهقي في دلائل النبوة)

இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மொழிந்தார்கள்:**

மனிதர்கள் இருபிரிவினர்களாக பிரிந்தால் அவ்விரண்டில் எது சிறந்த பிரிவோ அதில்தான் இறைவன் என்னை அமைத்தான்.

அறிவிப்பாளர் : அனஸ் ரழியல்லாஹு அன்ஹு
நூல் : பைஹகீ (தலாயில் நுவ்வா) எண் : 81

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வழித் தோன்ற-ல் ஒரு பிரிவினர் இஸ்லாமியர்களாக இருந்தனர் என்று இறைமறை வசனங்கள் கூறுகின்றன.

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்னோர்கள் மனிதர்களில் சிறந்தோர்களாக இருந்தனர் என்று நபிமொழிகள் அறிவிக்கின்றன.**

இவ்விரண்டையும் பொருத்திப்பார்க்கும்போது இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வழித் தோன்ற-ல் இஸ்லாமியர்களாக இருந்தவர்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தைச்சேர்ந்த முன்னோர்களே என்பது தெளிவாகும். இதையேற்க மறுத்தால், இணைவைப்போர் சிறந்தோரென்றும், இஸ்லாமியர் சிறந்தவரல்ல என்றும் கூறுகின்ற விபரீத நிலை ஏற்பட்டுவிடும்.

அல்லாஹ் காப்பாற்றுவானாக!

الَّذِىْ يَرَاكَ حِيْنَ تَقُوْمُ وَتَقَلُّبَكَ فِى السَّاجِدِيْنَ الشعراء: ٢١٨، ٢١٩

(4) நீங்கள் நிற்கும்போது உங்களையும் (இறைவனை) வணங்குவோர்களிடையே நீங்கள் புரண்டு வந்ததையும் அ(வ்விறை)வன் பார்க்கிறான்.
(அல்குர்ஆன் - 26:218, 219)

இமாம் பஃக்ருத்தீன் ராஜீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ‘அஸ்ராருத்தன்ஜீல்’ என்ற நு-ல் கூறுகிறார்கள் :

مَعْنَاهُ اَنَّهُ كَانَ يَنْتَقِلُ نُوْرُهُ مِنْ سَاجِدٍ اِلٰى سَاجِدٍ

இவ்வசனத்தின் கருத்து இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பேரொளி இறைவணக்கமுள்ளவர்வழியாகவே வந்து கொண்டிருந்தது என்பதாகும்.**

இறைத்தூதர் பொன்மொழிகள்

١ . عَنِ ابْنِ عَبَّاسٍ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ مَا وَلَدَنِيْ مِنْ سِفَاحِ اَهْلِ الْجَاهِلِيَّةِ شَيْئٌ مَا وَلَدَنِيْ اِلَّا نِكَاحٌ كَنِكَاحِ الْاِسْلَامِ

(رواه البيهقى في سننه والطبراني في المعجم الكبير و ابن عساكر)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

1. **அறியாமை காலத்து திருமண வழிமுறையில் நான் பிறக்கவில்லை. இஸ்லாமிய திருமணத்தைப் போல் அமைந்த திருமணத்தின் வாயிலாகவே நான் பிறந்தேன்.**

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு

நூற்கள்:	பைஹகீ	எண்	13845
	தப்ரானீ (கபீர்)	எண்	10812
	இப்னு அஸாகிர்	எண்	1207

٢ . عَنْ عَلِيِّ بْنِ اَبِي طَالِبٍ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : خَرَجْتُ مِنْ نِكَاحٍ وَلَمْ اَخْرُجْ مِنْ سِفَاحٍ مِنْ لَدُنْ آدَمَ اِلٰى اَنْ وَلَدَنِيْ اَبِيْ وَاُمِّيْ لَمْ يُصِبْنِيْ مِنْ نِكَاحِ اَهْلِ الْجَاهِلِيَّةِ شَيْئٌ

(رواه الطبراني فى الاوسط وابن ابي شيبة وابن عساكر)

2. இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மொழிந்தார்கள்:

திருமண அமைப்பு முறையிலேயே நான் பிறந்தேன். ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களி-ருந்து எனது தாய்-தந்தை என்னை ஈன்றெடுக்கும் வரை அறியாமை காலத்து மக்களின் திருமண முறை என்னை அணுகவில்லை.

அறிவிப்பாளர்: அலீ ரழியல்லாஹு அன்ஹு

நூற்கள்: தப்ரானி (அவ்ஸத்) எண்:4728
இப்னு அபீஷைபா எண்:31641
இப்னு அசாகிர் எண்:1212

٣. عَنِ ابْنِ عَبَّاسٍ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : لَمْ يَلْتَقِ اَبَوَايَ قَطُّ عَلٰى سِفَاحٍ لَمْ يَزَلِ اللّٰهُ يَنْقُلُنِيْ مِنْ اَصْلَابٍ طَيِّبَةٍ اِلٰى اَرْحَامٍ طَاهِرَةٍ مُصَفًّى مُهَذَّبًا لَاتَتَشَعَّبُ شُعْبَتَانِ اِلَّا كُنْتُ فِيْ خَيْرِهِمَا

(رواه ابونعيم في دلائل النبوة وابن عساكر والدر المنثور)

3. இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நவின்றார்கள்:

எனது தாய் - தந்தை இருவரும் அறியாமை கால திருமண முறையை சந்தித்ததில்லை. தூய்மையான முதுகந்தண்டி-ருந்து பரிசுத்தமான கருவறைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் என்னை இறைவன் கொண்டு வந்து கொண்டேயிருந்தான். இரு பிரிவினர் தோன்றினால் அவ்விரண்டில் சிறந்த

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

பிரிவினரில் நானிருந்தேன்.

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு

நூற்கள்: அபூ நுஅய்ம் (தலாயில் நுபுவ்வா) எண்:15
இப்னு அஸாகிர் எண்: 1217
துர்ருல் மன்ஃதூர் 3/294

٤. عَنْ عَائِشَةَ عَنْ رَسُوْلِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ عَنْ جِبْرَيْلَ عَلَيْهِ السَّلَامُ قَالَ قَلَبْتُ مَشَارِقَ الْاَرْضِ وَمَغَارِبَهَا فَلَمْ اَجِدْ رَجُلًا اَفْضَلَ مِنْ مُحَمَّدٍ وَلَمْ اَرَبَيْتًا اَفْضَلَ مِنْ بَيْتِ بَنِيْ هَاشِمٍ

(رواه الطبرانی فی الاوسط والبیهقی فی دلائل النبوة)

(4) இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இயம்பினார்கள்:

ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். சூரியன் உதிக்குமிடத்தி-ருந்து சூரியன் மறையும் இடம்வரை மண்ணுலகம் முழுவதையும் புரட்டிப்பார்த்தேன். முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைவிட ஒரு சிறந்த மனிதரை நான் பெற்றுக் கொள்ளவில்லை. பனூஹாஷிம் குடும்பத்தைவிட வேறு சிறந்த குடும்பத்தினரை நான் பார்க்கவில்லை.

அறிவிப்பாளர்: ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா

நூற்கள்: தப்ரானீ (அவ்சத்) எண்:6285
பைஹகீ (தலாயில் நுபுவ்வா) எண்: 102

٥. عَنْ وَاثِلَةَ بْنِ الْاَسْقَعِ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ

عَلَيْهِ وَسَلَّمَ : اِنَّ اللّٰهَ اصْطَفٰى كِنَانَةَ مِنْ وَلَدِ اِسْمَاعِيْلَ وَاصْطَفٰى قُرَيْشًا مِنْ كِنَانَةَ وَاصْطَفٰى مِنْ قُرَيْشٍ بَنِىْ هَاشِمٍ وَاصْطَفَانِيْ مِنْ بَنِيْ هَاشِمٍ

(رواه مسلم والترمذي واحمد والبيهقى فى سننه)

(5) இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சொன்னார்கள்:

இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பிள்ளைகளில் கினானா கோத்திரத்தை இறைவன் தேர்ந்தெடுத்தான். கினானாவில் குரைஷி குலத்தை இறைவன் தேர்ந்தெடுத்தான். குறைஷியில் பனூ ஹாஷிம் குடும்பத்தை இறைவன் தேர்ந்தெடுத்தான். பனூ ஹாஷிம் குடும்பத்தில் என்னை இறைவன் தேர்ந்தெடுத்தான்.

அறிவிப்பாளர்: வாஃஃதிலா இப்னுல் அஸ்கஃஃ ரழியல்லாஹு அன்ஹு

நூற்கள்: முஸ்-ம் எண்:2276
திர்மிதீ எண்: 3605
அஹ்மத் எண்: 16372
பைஹகீ எண்: 13542

٦.عَنِ الْعَبَّاسِ بْنِ عَبْدِ الْمُطَّلِبِ قَالَ قُلْتُ يَارَسُوْلَ اللّٰهِ اِنَّ قُرَيْشًا جَلَسُوْا فَتَذَاكَرُوْا اَحْسَابَهُمْ بَيْنَهُمْ فَجَعَلُوْا مَثَلَكَ مَثَلَ نَخْلَةٍ فِيْ كَبْوَةٍ

مِنَ الْاَرْضِ فَقَالَ النَّبِىُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : اِنْ اللّٰهَ خَلَقَ الْخَلْقَ فَجَعَلَنِيْ مِنْ خَيْرِ فِرَقِهِمْ وَخَيْرِ الْفَرِيْقَيْنِ ثُمَّ تَخَيَّرَ الْقَبَائِلَ فَجَعَلَنِيْ مِنْ خَيْرِ الْقَبِيْلَةِ ثُمَّ تَخَيَّرَ الْبُيُوْتَ فَجَعَلَنِيْ مِنْ خَيْرِ بُيُوْتِهِمْ فَاَنَا خَيْرُهُمْ نَفْسًا وَخَيْرُهُمْ بَيْتًا

(رواه الترمذي والبزار)

وقال ابوعيسى هذا حديث حسن .

(6) அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் (இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம்) வந்து கூறினார்கள்:

யாரஸூலல்லாஹ்! குரைஷிகள் அமர்ந்து கொண்டு அவர்களின் குடும்பங்களைப்பற்றி பேசிக் கொண்டார்கள். அப்போது புழுதியில் முளைத்த பேரீத்த மரத்திற்கு தங்களை உவமானப் படுத்திக் கூறினார்கள்:

இதைக்கேட்ட இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லாம் அவர்கள் கூறினார்கள்:

நிச்சயமாக இறைவன் மனித சமூகத்தைப் படைத்து அவர்களில் சிறந்த பிரிவில் என்னை அமைத்தான். பிறகு கோத்திரங்களைத் தேர்ந் தெடுத்து அவற்றில் சிறந்த கோத்திரத்தில் என்னை அமைத்தான். பின்னர் குடும்பங்களைத் தேர்வு செய்து அவற்றில் சிறந்த குடும்பத்தில் என்னைய மைத்தான். படைப்பிலும் குடும்பத்திலும் மனிதர்களில் நானே

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

சிறந்தவன்.

அறிவிப்பாளர்: அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு
நூற்கள்: திர்மிதி எண்:3607
பஜ்ஜார் எண்: 1316

٧عَنْ عَبْدِاللّٰهِ بْنِ عُمَرَ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : اِنَّ اللّٰهَ خَلَقَ الْخَلْقَ فَاخْتَارَ مِنَ الْخَلْقِ بَنِيْ آدَمَ وَاخْتَارَ مِنْ بَنِيْ آدَمَ الْعَرَبَ وَاخْتَارَ مِنَ الْعَرَبِ مُضَرَ وَاخْتَارَ مِنْ مُضَرَ قُرَيْشًا وَاخْتَارَ مِنْ قُرَيْشٍ بَنِيْ هَاشِمٍ وَاخْتَارَنِيْ مِنْ بَنِيْ هَاشِمٍ فَاَنَا مِنْ خِيَارٍ اِلٰى خِيَارٍ (رواه الطبرانى في المعجم الكبير والحاكم والبيهقى في دلائل النبوة)

(7) இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இயம்பினார்கள்:

திண்ணமாக இறைவன் படைப்பினங்களைப் படைத்து அவற்றில் மனிதசமூகத்தைத் தேர்ந்தெடுத்தான். பின்னர் மனிதர்களில் அரபி இன மக்களை தேர்வு செய்தான். அரபிகளில் முழர் கோத்திரத்தையும் அக்கோத்திரத்தில் குரைஷி குலத்தையும் தேர்வு செய்தான். குரைஷி குலத்தில் பனூஹாஷிம் குடும்பத்தைத் தேர்வு செய்து அக்குடும்பத்தில் என்னைத் தேர்ந்தெடுத்தான். சிறந்தவர்கள் வழியாகவே நான் வந்து கொண்டிருந்தேன்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு
நூற்கள்: தப்ரானி (கபீர்) எண்:13474
ஹாகிம் எண்: 7053
பைஹகீ (தலாயில்நுபுவ்வா)எண்: 78

٨عَنِ ابْنِ اِسْحَاقَ قَالَ: كَانَتْ آمِنَةُ بِنْتُ وَهْبٍ اُمُّ رَسُوْلِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ تُحَدِّثُ اَنَّهَا اُتِيَتْ حِيْنَ حَمَلَتْ بِمُحَمَّدٍ صَلَى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ فَقِيْلَ لَهَا : اِنَّكِ قَدْ حَمَلْتِ بِسَيِّدِ هٰذِهِ الْاُمَّةِ فَاذَا وَقَعَ عَلَى الْاَرْضِ فَقُوْلِىْ : اُعِيْذُهُ بِالْوَاحِدِ مِنْ شَرِّ كُلِّ حَاسِدٍ وَقَالَ فَاِنَّ آيَةَ ذٰلِكَ اَنْ يَخْرُجَ مَعَهُ نُوْرٌ يَمْلَأُ قُصُوْرَ بُصْرٰي مِنْ اَرْضِ الشَّامِ فَاِذَا وَقَعَ فَسَمِّيْهِ مُحَمَّدًا (رواه البيهقى فى دلائل النبوة)

(8) இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தாயார் ஆமினா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்:

நான் கர்ப்பிணியாக இருந்தபோது, என்னிடம் கூறப்பட்டது:

நிச்சயமாக நீங்கள் இந்த சமூகத்தின் தலைவரை சுமந்துள்ளீர்கள். அவர் இம்மண்ணுலகில் பிறந்தவுடன், "பொறாமைக்காரர்களின் தீங்கி-ருந்து ஏக இறைவனிடம் இக்குழந்தைக்கு பாதுகாப்புத்

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

தேடுகிறேன்" எனக்கூறுங்கள்!

அவர் பிறக்கின்றபோது ஒரு பேரொளி வெளிப்படும். அப்பேரொளியின் பிரகாசம் சிரியா நாட்டின் புஸ்ரா கோட்டையை நிரப்பிவிடும். இதுவே, அவர் இந்த சமுதாயத்தின் தலைவர் என்பதற்குரிய அத்தாட்சியாகும்.

அறிவிப்பாளர்: இப்னு இஸ்ஹாக் ரழியல்லாஹு அன்ஹு
நூல்: பைஹகீ (தலாயில் நுபுவ்வா) எண்:30

٩.عَنْ اَبِي اُمَامَةَ قَالَ قُلْتُ يَانَبِيَّ اللّٰهِ مَاكَانَ اَوَلَّ بَدْأِ اَمْرِكَ قَالَ دَعْوَةُ اَبِيْ اِبْرَاهِيْمَ وَبُشْرٰى عِيْسٰى وَرَأَتْ اُمِّيْ اَنَّهُ يُخْرُجُ مِنْهَا نُوْرٌ اَضَاءَ تْ مِنْهَا قُصُوْرُ الشَّامِ

(رواه احمد والحاكم والبيهقى فى دلائل النبوة)

(9) (இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம்) நான் கேட்டேன்:

யாநபியல்லாஹ்! (நபி அவர்களே!) உங்கள் படைப்பின் துவக்கம் எப்படியிருந்தது?

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பதிலுரைத்தார்கள்:

- ❖ எனது பாட்டனார் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் செய்த பிரார்த்தனை.
- ❖ ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வழங்கிய நற்செய்தி.
- ❖ சிரியா நாட்டின் கோட்டைகளுக்கு

வெளிச்சமளித்த பேரொளியை எனது தாயார் கண்ட காட்சி.

அறிவிப்பாளர்: அபூஉமாமா ரழியல்லாஹு அன்ஹு
நூற்கள்: அஹ்மத் எண்:21231
ஹாகிம் எண்: 4139
பைஹகீ (தலாயில்நுபுவ்வா) எண்: 16

١٠.عَنِ الْعِرْبَاضِ بْنِ سَارِيَةَ اَنَّ رَسُوْلَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: اِنِّيْ عَبْدُاللّٰهِ وَخَاتَمُ النَّبِيِّنَ وَاِنَّ آدَمَ لَمُنْجَدِلٌ فِيْ طِيْنَتِهِ وَسَاُخْبِرُكُمْ عَنْ ذٰلِكَ اَنَا دَعْوَةُ اَبِيْ اِبْرَاهِيْمَ وَبِشَارَةُ عِيْسٰى بِيْ وَرُؤْيَااُمِّيْ الَّتِيْ رَأَتْ وَكَذٰلِكَ اُمَّهَاتُ الْاَنْبِيَاءِ يَرَيْنَ وَاِنَّ اُمَّ رَسُوْلِ اللّٰهِ صَلَى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ رَأَتْ حِيْنَ وَضَعَتْهُ نُوْرًا اَضَاءَ لَهُ قُصُوْرُ الشَّامِ (رواه احمد والطبراني فى المعجم الكبير والحاكم والبيهقى في دلائل النبوة)

(10) இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நவின்றார்கள்:

திண்ணமாக ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் களிமண்ணில் பிணைந்திருந்த போதே நான் இறையடியாராகவும் இறுதிநபியாகவுமிருந்தேன். அதைப்பற்றிய செய்தியை உங்களுக்கு அறிவிக் கிறேன்:

- ❖ எனது பாட்டனார் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின்

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

பிரார்த்தனை.

- ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் என்னைப்பற்றி வழங்கிய நற்செய்தி
- எனது தாயார் கண்ட கனவு ஆகியவற்றின் வெளிப்பாடாக நானுள்ளேன்.

மற்ற நபிமார்களை ஈன்றெடுக்கும்போது அவர்களின் தாய்மார்களும் இவ்வாறே பார்த்தார்கள்.

இறைத்தூதர் அவர்களை ஈன்றெடுத்த சமயம் அவர்களின் தாயார் ஒரு பேரொளியைப் பார்த்தார்கள். அதன் மூலம் சிரியா நாட்டு கோட்டைகளெல்லாம் பிரகாசித்தன.

அறிவிப்பாளர் : இர்பாழ் இப்னு சாரியா
ரழியல்லாஹுஅன்ஹு
நூற்கள் : அஹ்மத் எண்:16525
ஹாகிம் எண் : 4140
தப்ரானி (கபீர்) எண் : 15032
பைஹகீ (தலாயில்நுபுவ்வா) எண் : 13

அனைத்து நபிமார்களின் தாய்மார்களும் இறை நம்பிக்கையாளர்களாகவே இருந்துள்ளனர் என்பதை மேற்கண்ட ஹதீஃத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. சில நபிமார்களின் அன்னையர்களைப்பற்றி இறைவன் அருள்மறையில் குறிப்பிடுகிறான்.

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தாய்

مَا الْمَسِيْحُ بْنُ مَرْيَمَ اِلَّا رَسُوْلٌ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ وَاُمُّهُ صِدِّيْقَةٌ (المائدة : ٧٥)

மர்யமின் மகன் மஸீஹ் ஒரு தூதரேயன்றி வேறில்லை. அவருக்கு முன் இறைத்தூதர்கள் சென்றுள்ளனர் மேலும், அவரின் தாயார் உண்மையாளர்.
(அல்குர்ஆன் - 5:75)

இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தாய்

رَحْمَتُ اللّٰهِ وَبَرَكَاتُهُ عَلَيْكُمْ اَهْلَ الْبَيْتِ (هود : ٧٣)

இவ்வீட்டிற்குரியவர்களே! அல்லாஹ்வின் கருணையும் அவனின் அருட்களும் உங்களுக்குண்டு.
(அல்குர்ஆன் - 11:73)

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தாய்

وَاَوْحَيْنَا اِلٰى اُمِّ مُوْسٰى اَنْ اَرْضِعِيْهِ فَاِذَا خِفْتِ عَلَيْهِ فَاَلْقِيْهِ فِى الْيَمِّ وَلَاتَخَافِي وَلَا تَحْزَنِي اِنَّا رَادُّوْهُ اِلَيْكِ وَجَاعِلُوْهُ مِنَ الْمُرْسَلِيْنَ (القصص : ٧)

மேலும், மூஸாவின் தாயாருக்கு நாம் அறிவித்தோம். அவருக்கு பாலூட்டுவீராக! அவருக்கு (ஆபத்து வருமென்று) நீர் அஞ்சினால் அவரை நதியில் விட்டுவிடுவீராக! நீர் அஞ்சவும் வேண்டாம் கவலை கொள்ளவும் வேண்டாம்! திண்ணமாக நாம் அவரை உம்மிடம் கொண்டு வருவோம். மேலும், அவரை இறைத்தூதர்களில் (ஒருவராக) ஆக்குவோம்.
(அல்குர்ஆன் - 28:7)

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தாய்

رَبَّنَا اغْفِرْلِي وَلِوَالِدَيَّ وَلِلْمُؤْمِنِيْنَ يَوْمَ يَقُوْمُ الْحِسَابُ
(ابراهيم : ٤١)

எங்கள் இறைவா! எனக்கும், என் தாய்-தந்தைக்கும் நம்பிக்கையாள(ர் அனைவ)ருக்கும் கணக்கு கேட்கப்படும் நாளில் மன்னிப்பு வழங்குவாயாக!
(அல்குர்ஆன் - 14:41)

நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தாய்

رَبِّ اغْفِرْلِي وَلِوَالِدَيَّ وَلِمَنْ دَخَلَ بَيْتِيَ مُؤْمِنًا وَلِلْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ (نوح : ٢٨)

என் இறைவனே! என்னையும், என் தாய் - தந்தையையும் நம்பிக்கை கொண்டவராக எனது வீட்டில் நுழைந்தவரையும் நம்பிக்கையாளர்களான ஆண்களையும், பெண்களையும் மன்னிப்பாயாக!
(அல்குர்ஆன் - 71:28)

நாயகக்கண்மணி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வயிற்றில் சுமக்கும் நற்பாக்கியம் பெற்ற அன்புத்தாயார் ஆமினா ரழியல்லாஹு அன்ஹா பல்வேறு அற்புத காட்சிகளை கண்டிருப்பது அவர்கள் மாபெரும் இறைநேசராக வாழ்ந்துள்ளார்களென்பதை உறுதிபட அடையாளம் காட்டுகிறது. நல்லோர்களுக்கு மட்டுமே ‘கராமத்’ எனும் அற்புதத்தை இறைவன் வழங்குவான் என்பது நாமறிந்ததே.

١١. عَنْ اَنَسٍ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ :
اَنَاخَيْرُكُمْ نَفْسًا وَخَيْرُكُمْ اَبًا (رواه البهقي في دلائل النبوة)

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

(11) இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இயம்பினார்கள்:

உங்களில் நான் சிறந்தவன். உங்கள் தந்தைமார் களில் எனது தந்தை சிறந்தவர்.

அறிவிப்பாளர்: அனஸ் ரழியல்லாஹுஅன்ஹு
நூல்: பைஹகீ (தலாயில் நுபுவ்வா) எண்:81

இறைவன் நாடினால் மன்னிக்கப்படும் பாவங்களான திருட்டு, விபச்சாரம் மற்றும் மது அருந்துதல் போன்ற குற்றம்புரியும் எவரையும் சிறந்தவர் என்று நாம் கூறுவதில்லை. அவ்வாறெனில் மன்னிக்கப்படாத குற்றமான இணைவைக்கும் ஈனச்செயலை செய்வோரை சிறந்தவர் என்று அறவே கூறக்கூடாதென்பது வெள்ளிடைமலை.

ஆனால், அப்துல்லாஹ் ரழியல்லாஹுஅன்ஹு அவர்கள் சிறந்த தந்தையென்று இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியதை மேற்கண்ட ஹதீஃதில் பார்த்தோம். இதி-ருந்து தாஹா நபியின் தந்தையார் அப்துல்லாஹ் ரழியல்லாஹுஅன்ஹு அவர்கள் இணைவைப்பு உள்பட எப்பாவமும் புரியாத அப்பழுக்கற்ற தூய மனிதர் என்பது தெளிவாகிறது.

١٢.عَنْ مَعَاوِيَةَ بْنِ اَبِيْ سُفْيَانَ قَالَ كُنَّا عِنْدَرَسُوْلِ اللّٰهِ صَلَّى اللّٰهُ
عَلَيْهِ وَسَلَّمَ فَاَتَاهُ الْاَعْرَابِيُّ فَقَالَ يَا رَسُوْلَ اللّٰهِ خَلَفتِ الْبِلَادُ
يَابِسَةً وَالْمَاءُ يَابِسًاهَلَكَ الْمَالُ وَضَاعَ الْعِيَالُ فَعُدْعَلَيَّ بِمَا
اَفَاءَ اللّٰهُ عَلَيْكَ يَا ابْنَ الذَّبِيْحَيْنِ فَتَبَسَّمَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى

اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَلَمْ يُنْكِرْ عَلَيْهِ فَقُلْنَا يَا اَمِيْرَ الْمُؤْمِنِيْنَ وَمَا الذَّبِيْحَانِ قَالَ: اِنَّ عَبْدَالْمُطَّلِبِ لَمَا اَمَرَبِحَفْرِ زَمْزَمَ نَذَرَ لِلّٰهِ اِنْ سَهَّلَ اللّٰهُ اَمْرَهَا اَنْ يَنْحَرَبَعْضَ وَلَدِهِ فَاَخْرَجَهُمْ فَاَسْهَمَ بَيْنَهُمْ فَخَرَجَ السَّهْمُ لِعَبْدِاللّٰهِ فَاَرَادَ ذَبْحَهُ فَمَنَعَهُ اَخْوَالُهُ مِنْ بَنِيْ مَخْزُوْمٍ وَقَالُوْا اِرْضَ رَبَّكَ وَافْدِ اِبْنَكَ قَالَ فَفَدَاهُ بِمَائَةِ نَاقَةٍ قَالَ فَهُوَالذَّبِيْحُ وَاِسْمَاعِيْلُ الثَّانِيْ

(رواه الحاكم فى المستدرك وابونعيم في معرفة الصحابة)

(12) முஆவியா ரழியல்லாஹுஅன்ஹு அவர்கள் அறிவிக் கிறார்கள்:

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சமுகத்தில் நாங்களிருந்தபோது ஒரு கிராமவாசித் தோழர் அங்கே வருகை தந்து சொன்னார்:

யாரஸுலல்லாஹ்! நிலமும் நீரும் வரண்டு விட்டது. பொருளாதாரம் சிதைந்து குடும்பம் சிரமத்திற் குள்ளாகிவிட்டது. அறுத்துப்ப-யிட அழைத்துச் செல்லப்பட்ட இருவரின் மகனே! இறைவன் உங்களுக்கு வழங்கியதி-ருந்து எனக்குக்கொடுங்கள்!

இதைக்கேட்ட இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் புன்முறுவல் பூத்தார்கள், மறுத்துப் பேசவில்லை.

ப-யிட அழைத்துச் செல்லப்பட்ட இருவர் யார்? என அங்கிருந்தோர் வினவியபோது முஆவியா

ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பதிலளித்தார்கள்:

திண்ணமாக அப்துல் முத்த-ப் அவர்கள் ஜம்ஜம் கிணறைத் தோண்ட எண்ணிய சமயம், இக்காரியத்தை இறைவன் எளிதாக்கித்தந்தால் அவரது பிள்ளைகளில் ஒருவரை அறுத்துப்ப-யிடுவதாக நேர்ச்சை செய்தார். அதன்படி சீட்டுக்குலுக்கிப் போட்டுப்பார்த்தபோது அப்துல்லாஹ்வின் பெயர் வந்தது. அவர்களை அறுத்துப்ப-யிட அப்துல் முத்த-ப் முனைந்தபோது அவர்களின் மாமன்மார்கள் தடுத்து பிணைத்தொகை கொடுத்திடுமாறு கூறினர். நூறு ஒட்டகைகளை பிணையாக அப்துல் முத்த-ப் கொடுத்தார். ஆகவே அறுத்துப்ப-யிட அழைத்துச் செல்லப்பட்டவர்களில் ஒருவர் அப்துல்லாஹ். இரண்டாமவர் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம்.

நூற்கள்: ஹாகிம் எண்:3995

அபூநுஅய்ம் (மஃரிஃபதுஸ்ஸஹாபா) எண்:5481

அறுத்துப்ப-யிட அழைத்துச் செல்லப்பட்டவரின் மகனென்று கிராமத்துத் தோழர் கூறியதை இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இன்முகத்தோடு ஏற்றுக் கொண்டது அண்ணலெம் பெருமானாரின் ஆருயிர்தந்தை அப்துல்லாஹ் ரழியல்லாஹுஅன்ஹு அவர்கள், மாண்பும் மகத்துவமும் மிக்கவர் என்பதை பறைசாற்றுகிறது.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் அருமை பாட்டனார் அப்துல் முத்த-ப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹ்விற்காக

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

நேர்த்திக்கடன் ஆற்றினார் என்ற மேற்கண்ட ஹதீஃதின் தகவல், ஏகத்துவப் பாட்டையிலேயே பாட்டனாரும் நடைபோட்டுள்ளார் என்பதை முரசு கொட்டுகிறது. இது சுன்னத் வல்ஜமாஅத்தினரான நமது செவிகளுக்கு நன்றாகக் கேட்கிறது. ஆனால், காதிருந்தும் செவிடர்களாக உள்ள வஹ்ஹாபிகளின் காதுகளிலும் விழ வேண்டுமே! என்பதுதான் நமது ஆதங்கம்.

١٣. عَنِ الْبَرَّاءِ بْنِ عَازِبٍ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : اَنَا النَّبِيُّ لَا كَذِبْ اَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِبِ

(رواه البخاري ومسلم)

(13) இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

நான் இறைத்தூததராகவுள்ளேன். அதில் பொய்யில்லை, நான் அப்துல் முத்த-பின் பேரனாகவும் உள்ளேன்.

அறிவிப்பாளர் : பர்ராவு ரழியல்லாஹுஅன்ஹு
நூற்கள் : புகாரீ எண்: 2652
முஸ்-ம் எண் : 3325

அப்துல் முத்த-பின் பேரனாகயிருக்கிறேன் என்று கூறி தனது பாட்டனாரின் சிறப்பை விளக்கியிருக்கிறார்கள் பூமான் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள். அதுவும் கூட நான் இறைத்தூதர் என்று பிரகடனம் செய்த நேரத்தில் கூறியிருக்கிறார்கள். அப்துல் முத்த-ப் ஏகத்துவ வழியில் வாழ்ந்தவர் என்பதால் தான் இறைத்தூதர்

ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இவ்வாறு சொல்-க்காட்டியுள்ளார்கள் என்பது நன்கு புலனாகிறது.

١٤. عَنْ اِبْنِ مَسْعُوْدٍ قَالَ قَالَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : مَاسَأَلْتُهُمَا يَعْنِي اَبَوَيْهِ رَبِّي فَيُعْطِيْنِي فِيْهِمَا وَاِنِّي لَقَائِمٌ يَوْمَئِذٍ الْمَقَامَ الْمَحْمُوْدَ (رواه الحاكم)

(14) இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மொழிந்தார்கள்:

மறுமைநாளில் மகாமே மஹ்மூத் எனும் புகழுக்குரிய இடத்தில் நானிருக்கும் போது என்தாய் தந்தைக்காக என்னிறைவனிடம் நான் கேட்பேன். (நான் கேட்டதை) அவன் எனக்கு வழங்குவான்.

அறிவிப்பாளர் : இப்னு மஸ்வூத் ரழியல்லாஹுஅன்ஹு
நூற்கள் : ஹாகிம் எண்: 3342

மறுமை நாளில் பரிந்துரைப்பதும், அப்பரிந்துரை இறைவனிடம் அங்கீகரிக்கப்படுவதும் இறைநம்பிக் கையாளர்களுக்கு மட்டுமே. ‘என் பெற்றோருக்காக நான் இறைவனிடம் கேட்பேன். இறைவன் அதைத்தருவான்’ என்ற நபிகளாரின் வாக்கு அவர்களின் தாயும் தந்தையும் இறைநம்பிக் கையாளர்களென்பதை உறுதிப்படுத்துகிறது.

விவாதம் - 1

தன் **தாயாருக்கு மன்னிப்புத் தேடுவதற்காக இறைவனிடம் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனுமதி கேட்டபோது இறைவன் மறுத்துவிட்டான். இதி-ருந்து அவர்களின் தாயார் இணைவைத்தவர்களாக இருந்துள்ளார்கள் எனப் புலனாகிறது. ஏனெனில், அவர்கள் இறைநம்பிக் கையாளராக இருந்திருப்பின் பாவமன்னிப்புத் தேடுவதற்கு இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அனுமதி வழங்கப் பட்டிருக்கும்.**

விளக்கம்:

عَنْ اَبِىْ هُرَيْرَةَ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ
اِسْتَأْذَنْتُ رَبِّىْ اَنْ اَسْتَغْفِرَ لِاُمِّىْ فَلَمْ يَأْذَنْ لِىْ وَاسْتَأْذَنْتُهُ فِىْ
اَنْ اَزُوْرَ قَبْرَهَا فَاَذِنَ لِىْ (راه مسلم)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மொழிந்தார்கள்:

என்தாயாருக்கு பாவமன்னிப்புத் தேடுவதற்காக எனது இறைவனிடம் அனுமதி கேட்டேன். எனக்கு அனுமதி தரவில்லை. எனது தாயாரின் கப்ரை தரிசிக்க அனுமதி வேண்டினேன். இறைவன் எனக்கு அனுமதி வழங்கினான்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு
நூல் : முஸ்-ம் - எண்: 1621

இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்**

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

அவர்கள் தனது தாயாருக்காக இறைவனிடம் இரு கோரிக்கைகள் வைத்ததை மேற்கண்ட ஹதீஃதில் நாம் புரிகிறோம்.

1. தாயார் கப்ரை ஜியாரத் செய்தல்.
2. தாயாருக்காக பாவமன்னிப்புக் கோருதல்.

இவ்விரண்டில் ஒன்றுக்கு அனுமதிவழங்கப்பட்டு மற்றொன்றுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

பாவமன்னிப்புத் தேடுவதற்கு இறைவன் அனுமதி வழங்கவில்லையென்பதால் நபிகளாரின் தாயார் இறைநம்பிக்கையாளர் அல்ல என்று குறுக்கு வழியில் மட்டுமே சிந்திக்கத் தெரிந்த சிலர், ஜியாரத் செய்ய இறைவன் அனுமதி தந்துள்ளதால் நபிகளாரின் தாயார் இறைநம்பிக்கையாளர்தான் என நேரியவழியில் சிந்தனை செய்ய முன்வரவில்லை.

ஏனென்றால் இறைமறுப்பாளர்களின் கப்ருகளை ஜியாரத் செய்யக்கூடாதென இறைவன் அருள்மறையில் தடைசெய்கிறான்.

وَلَاتَقُمْ عَلٰى قَبْرِهِ اِنَّهُمْ كَفَرُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهِ (التوبة : ٨٤)

(நபியே அவர்களில்) யாருடைய கப்ருக்கு அருகிலும் நிற்காதீர்கள்! திண்ணமாக அவர்கள் இறைவனையும், அவனின் திருத்தூதரையும் மறுத்துவிட்டார்கள். *(அல்குர்ஆன்-9:84)*

இறைமறுப்பாளர்களின் கப்ருகளை ஜியாரத் செய்ய தடைவிதித்த இறைவன், இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு தனது தாயாரின் கப்ரை ஜியாரத் செய்வதற்கு அனுமதி

வழங்கியுள்ளானென்றால் அண்ணலாரின் அன்புத் தாயார் இறைநம்பிக்கையாளர் என்பதால்தான்.

பிறகு ஏன் பாவமன்னிப்புத் தேடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது? என்ற கேள்வி எழும். அதற்குக் காரணி, தாஹா நபியின் தாயாருக்கு பாவமன்னிப்புக் கோருவது அவசியமில்லை என்பதே.

ஏனென்றால், நபிகளாரின் அன்புத்தாயாரும் அருமைத்தந்தையாரும் இறைத்தூதர் அனுப்பி வைக்கப்படாத காலத்தில் வாழ்ந்தவர்கள். இதற்கு அரபி மொழியில் ‘ஃபத்ரத்’ எனக்கூறப்படும். ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப்பின் முஹம்மது முஸ்தஃபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வரை எந்தவொரு இறைத்தூதரும் வரவில்லையென்பதால் அது ‘ஃபத்ரத்’ காலமாகும்.

‘ஃபத்ரத்’ காலகட்டத்தில் வாழ்ந்த மக்களுக்கு தண்டனைகிடையாதென்பது இறைமறைவாக்கு.

وَمَا كُنَّامُعَذِّبِيْنَ حَتّٰى نَبْعَثَ رَسُوْلًا (بني اسرائيل : ١٥)

நாம் ஒரு திருத்தூதரை அனுப்பாதவரை (யாரையும்) வேதனை செய்வதில்லை.

(அல்குர்ஆன்: 17:15)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அன்புத்தாயார் ‘ஃபத்ரத்’ காலத்திலுள்ளவர்கள் என்பதால் மேற்கண்ட வசனத்தின்படி அவர்களுக்கு பாவமன்னிப்புத் தேடவேண்டிய அவசியம் இல்லாமலாகிவிட்டது. ஆகவேதான், இறைவன் அதற்கு அனுமதி வழங்கவில்லை.

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

விவாதம் 2 :

‘ஃபத்ரத்’ காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு இறைதண்டனை கிடையாதென்பது ஏற்புக்குரியதல்ல. ஏனென்றால் ஃபத்ரத் கால மக்களில் சிலருக்கு தண்டனையுண்டு என அறிவிக்கும் நபிமொழிகள் உள்ளன.

விளக்கம் :

ஃபத்ரத் காலத்தில் வாழ்ந்தவர்களில் சிலர் நரக வேதனையைப் பெறுவதாக இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருப்பது உண்மை. முதலாவதாக அத்தகைய ஹதீஸ்களைப் பார்ப்போம். அவற்றிற்குரிய விளக்கங்களைப்பின்னர் தெரிந்து கொள்வோம்.**

عَنْ اَبِيْ هُرَيْرَةَ قَالَ قَالَ النَّبِىُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ :
رَأَيْتُ عَمْرَو بْنَ عَامِرِ بْنِ لُحَيٍّ الْخُزَاعِيِّ يَجُرُّ قُصْبَهُ فِى
النَّارِ (رواه البخارى ومسلم واحمد)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்

அம்ர் இப்னு ஆமிர் இப்னு லுஹய் என்பவர் நரகத்தில் தனது குடலை இழுத்துக் கொண்டு செல்வதை நான் பார்த்தேன்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழி யல்லாஹு அன்ஹு
நூற்கள் : புகாரீ எண் : 3260
முஸ்-ம் எண் : 5097
அஹ்மத் எண் : 7385

عَنْ جَابِرٍ قَالَ قَالَ رَسُوْلُ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ :
رَأَيْتُ صَاحِبَ الْمِحْجَنِ يَجُرُّ قُصْبَهُ فِىْ النَّارِ كَانَ يَسْرِقُ
الْحَاجَّ بِمِحْجَنِهِ فَانْ فُطِنَ لَهُ قَالَ اِنَّمَا تعَلّقَ بِمِحْجَنِي وَاِنْ
غُفِلَ عَنْهُ ذَهَبَ بِهِ (رواه مسلم واحمد)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

(ஸாஹிபுல் மிஹ்ஜன்) என்ற கைத்தடி வைத்திருக்கும மனிதர் நரகத்தில் தனது குடலை இழுத்துச் செல்வதை நான் கண்டேன். தனது கைத்தடியால் ஹாஜிகளிடம் திருடும் வழக்க முள்ளவராக அவர் இருந்தார். அவர் திருடுவதை யாராவது பார்த்து விட்டால், என் கைத்தடியில் அது மாட்டிக் கொண்டு விட்டது. (நான் திருடவில்லை) என்பார். யாரும் பார்க்கவில்லையானால் திருடியதைக் கொண்டு சென்று விடுவார்.

அறிவிப்பாளர் : ஜாபிர் ரழி யல்லாஹு அன்ஹு
நூற்கள் : புகாரீ எண் : 1508
அஹ்மத் எண் : 13897

இந்த ஹதீஃத்களுக்கு மூன்று விளக்கங்களை கண்ணியத்திற்குரிய இமாம்கள் தருகின்றனர்.

1. இந்த ஹதீஃத்கள் 'அஃக்பார் ஆஹாத்' வகையைச் சார்ந்தவை. இவ்வகை சார்ந்த ஹதீஃத்களின் கருத்துகள் குர்ஆன் வசனத்தின் கருத்துக்கு முரண்பட்டால் ஹதீஃத்களை கவனத்தில்

கொள்ளாமல் குர்ஆன் வசனத்திற்கே முன்னுரிமை வழங்க வேண்டும்.

(17:15) என்ற வசனம் இறைத்தூதர் அனுப்பப்படாத எவருக்கும் தண்டனை இல்லை என்று இயம்புகிறது.

2. 'ஃபத்ரத்' காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு தண்டனையில்லை என்கின்ற பொதுச்சட்டத்தி-ருந்து ஹதீஃதில் கூறப்பட்டவர்கள் விதிவிலக்கானவர்கள் என்று பொருள் கொள்ள வேணடும்.

3. ஃபத்ரத் காலத்திருந்த மக்களில் சிலைவழிபாடு செய்தவர்களுக்கு மட்டும் தண்டனை உண்டு என்ற முடிவுக்கு வரவேண்டும்.

ஏனெனில், ஃபத்ரத் காலகட்டத்தில் வாழ்ந்த மக்களை மூன்று வகையினராகப் பிரிக்கலாம்.

(அ) முதல் வகையினர்:

இறைவனுக்கு இணைக் கற்பிக்காமல் ஏகத்துவப் பாதையைத் தேர்ந்தெடுத்தவர்கள்.

(i) இவர்களில் சிலர் முன்பிருந்த மார்க்கத்தில் தங்களை இணைத்துக் கொள்ளவில்லை. உதாரணத்திற்கு,

- குஸ் இப்னு சாயிதா
- ஜைத் இப்னு அம்ர் இப்னி நுஃபய்ல்

ஆகியோரைக் குறிப்பிடலாம்.

(ii) முன்பிருந்த மார்க்கத்தில் தங்களை இணைத்துக்கொண்டோரும் இவர்களில் சிலருண்டு.

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

உதாரணமாக,

- தப்பஃ
- அவரது சமூகமான ஹுமைர் இனமக்கள்
- நஜ்ரான் வாசிகள்
- வரகா இப்னு நவ்ஃபல்
- உஃத்மான் இப்னு ஹுவய்ரிஃத்

ஆகியோரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

நூல் : மவாஹிப் லதுன்னியா.

(ஆ) இரண்டாம் வாகயினர்:

ஏகத்துவத்தைப்புறக்கணித்துவிட்டு இணைவைப்பில் ஈடுபட்டவர்கள். முன்பிருந்த மார்க்கத்தின் சட்டதிட்டங்களை சிதைத்தவர்கள்.

- ஆகுமானைதக் கூடாதென்பார்கள்.
- விலக்கப்பட்டதைக் கூடுமென்பார்கள்

அரபு மக்களில் இவ்வகையினர்தான் கணிசமான எண்ணிக்கையி-ருந்தனர். அம்ரு இப்னு லுஹய் என்பவன் இவ்வகையைச் சார்ந்தவன்.

(இ) மூன்றாம் வகையினர்:

இவர்களிடம் ஏகத்துவக் கொள்கை இருக்காது. அதே சமயம் இணைவைப்புக் காரியங்களிலும் ஈடுபட்டிருக்கமாட்டார்கள். மேலும், முன்னுள்ள மார்க்கத்தில் தங்களை இணைத்துக்கொண்டிருக்கவும் மாட்டார்கள், ஏதோ பிறந்தோம், வாழ்கிறோம்,

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

மடிவோம் என்ற மனோ நிலையில் உள்ளவர்கள்.

☐ ஃபத்ரத் காலத்து மக்களுக்கு தண்டனை கிடையாதென்பது (இ) மூன்றாம் வகையினருக்குப் பொருந்தும்.

☐ ஃபத்ரத் காலத்தில் வாழ்ந்தவர்களில் சிலருக்கு தண்டனையுண்டு என்பது (ஆ) இரண்டாம் வகையினருக்குரியது.

☐ (அ) முதல் வகையினர் மறுமையில் வெற்றிபெறும் நன்மக்கள். இவர்களில் முன்பிருந்த தூய மார்க்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டவர்கள் அம் மார்க்கம் சார்ந்தோராக கருதப்படுவார்கள்.

முன்பிருந்த மார்க்கத்தில் இணைந்து கொள்ளாதோர் தனி சமூகமாக எழுப்பப்படுவரென இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.**

عَنْ سَعِيْدِ بْنِ زَيْدٍ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ: اِنَّ زَيْدًا بْنَ عَمْرٍو يُبْعَثُ يَوْمَ الْقِيَامَةِ اُمَّةً وَحْدَهُ

(رواه احمد والحاكم والطبراني فى الكبير)

இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள் :**

நிச்சயமாக ஜைத் இப்னு அம்ர் என்பவர் மறுமை நாளில் தனி சமூகமாக எழுப்பப்படுவார்.

அறிவிப்பாளர் : சயீத் இப்னு ஜைத் ரழியல்லாஹு அன்ஹு

நூற்கள் : அஹ்மத் எண் : 1561

ஹாகிம் எண் : 5889
தப்ரானீ (கபீர்) எண் : 354

ஜைத் இப்னு அம்ர் என்பவர் நல்ல மனிதராக வாழ்ந்தார் என்ற விவரம் புகாரியில் (எண் 5075) பதிவு செய்யப்பட்ட ஹதீஃத் அறிவிக்கிறது.

இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குஸ் இப்னு சாயிதாவை சிறந்தவர் என்று அறிவித்த ஹதீஃத் பைஹகீ - தலாயில் நுபுவ்வா (எண்** : 423) வில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முன்பிருந்த மார்க்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டு ஏகத்துவப்பாட்டையில் நடைபோட்டவர்கள் மறுமையில் நல்வாழ்வு பெற்றவர்களாகத் திகழ்வார்கள் என்பதை கீழ்க்காணும் ஹதீஃத் அறிவிக்கிறது.

عَنْ عَائِشَةَ اَنَّ خَدِيْجَةَ سَأَلَتْ رَسُوْلَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ عَنْ وَرَقَةَ بْنِ نَوْفَلٍ فَقَالَ قَدْ رَأَيْتُهُ فِى الْمَنَامِ فَرَاَيْتُهُ عَلَيْهِ ثِيَابُ بَيَاضٍ فَاَحْسِبُهُ لَوْكَانَ مِنْ اَهْلِ النَّارِ لَمْ يَكُنْ عَلَيْهِ ثِيَابُ بَيَاضٍ (رواه احمد)

திண்ணமாக ஃகதீஜா ரழியல்லாஹு அன்ஹா வரகதுப்னு நவ்ஃப-ன் (மறுமை) நிலை பற்றி இறைத்தூர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டார்கள்.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள் :

வெண்ணிற ஆடை அணிந்தவராக கனவில் அவரை நான் கண்டேன். அவர் நரகவாசியாக இருந்திருந்தால் வெண்மை ஆடை அவரிடம் காணப்பட்டிருக்காது.

அறிவிப்பாளர் : ஆயிஷா ரழி யல்லாஹு அன்ஹா
நூல் : ஹாகிம் எண் : 23231

நம் உயிரினும் மேலான நாயகக்கண்மணி **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெற்றோர் மற்றும் முன்னோர் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ஏகத்துவ மார்க்கத்தில் பிடிப்புடன் வாழ்ந்தவர்கள் என்பதால் அவர்கள் (அ) முதல் வகையைச் சாந்தவர்கள் என்றும் அவர்கள் அனைவரும் மறுமையின் நல்வாழ்வுக் குரியவர்கள் என்றும் மேற்கண்ட ஹதீஃத்களின் வழியாக தெரிந்துகொள்கிறோம்.**

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

விவாதம் 3 :-

ஒரு கிராமவாசியிடம், உன் தந்தையும் என் தந்தையும் நரகத்திலுள்ளனர் என்று இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். இதன்மூலம், அவர்களின் தந்தையார் இறைநம்பிக்கையாளர் அல்ல என்றுதானே நிரூபணம் ஆகிறது.

விளக்கம்:-

இப்படியொரு ஹதீஃத் முஸ்லிமிலும் அபூதாவூதிலும் பதியப்பட்டிருப்பது உண்மை. அந்த ஹதீஃதையும் அதன் விளக்கத்தையும் கீழே காண்போம்.

عَنْ اَنَسٍ اَنَّ رَجُلًا قَالَ يَارَسُوْلَ اللّٰهِ اَيْنَ اَبِيْ قَالَ فِى النَّارِ
فَلَمَّا قَفّٰى دَعَاهُ فَقَالَ اِنَّ اَبِيْ وَاَبَاكَ فِى النَّارِ

(رواه مسلم وابو داؤد)

ஒருவர் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் வந்து, யாரஸூலல்லாஹ்! எனது தந்தை எங்கேயுள்ளார்? எனக்கேட்டார்.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதில் கூறினார்கள்: அவர் நரகத்திலுள்ளார்.

இப்பதிலைக் கேட்ட அம்மனிதர் திரும்பிச் சென்றபோது, இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவரை அழைத்துச்

சொன்னார்கள்:

என் தந்தையும் உன் தந்தையும் நரகத்தில் உள்ளனர்.

அறிவிப்பாளர்: அனஸ் ரழியல்லாஹு அன்ஹு

நூற்கள்: முஸ்லிம் எண்:302
அபூதாவுத் எண்: 4095

இந்த ஹதீஃதுக்கு இருவகை விளக்கங்கள் உண்டு.

1. ஹதீஃதின் அறிவிப்பாளர் தொடர்
2. ஹதீஃதின் அர்த்தம்.

1. ஹதீஃதின் அறிவிப்பாளர் தொடர்:

மேற்கண்ட ஹதீஃதை ஃதாபித்தின் வழியாக ஹம்மாது இப்னு ஸலமா அறிவிக்கிறார்.

இப்னுஹஜர் அஸ்கலானி ரஹ்மதுல்லாஹி அலைஹி இவரைப்பற்றி கீழ்க்காணுமாறு கூறுகிறார்கள்:

ஹம்மாது இப்னு ஸலமா சிறந்த அறிஞராகவும் வணக்கவாளியாகவும் இருந்தாலும் இவர் அறிவித்த ஹதீஃத்களில் சில மறுக்கப்பட வேண்டியவை யென்று ஹதீஃத் கலை வல்லுனர்களில் சிலர் குறிப்பிட்டுள்ளனர். ஹதீஃதில் இல்லாத வாசகங்களை சிலபொய்யர்கள் இவர் அறிவிக்கும் ஹதீஃதில் புகுத்தி விட்டனர். இதனாலேயே இமாம் புகாரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் இந்த ஹம்மாது இப்னு ஸலமா அறிவிக்கும் ஹதீஃதை தனது 'ஸஹீஹ் புகாரி' நூலில் பதிவு செய்யவில்லை, 'தஃலீக்'கில் மட்டுமே கொண்டு வருகிறார்கள்.

நூல் : தஹ்ஃதீபுத் தஹ்ஃதீப் எண்:3/13

இமாம் பைஹகீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள் :

ஹம்மாது இப்னு ஸலமா இஸ்லாமிய மார்க்க அறிஞர்களில் ஒருவர். இருப்பினும், அவர் முதுமைப்பருவம் அடைந்தபோது அவரது மனன சக்தியில் குறைபாடு ஏற்பட்டு விட்டது. ஆகவே தான் இமாம் புகாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் இவரது அறிவிப்பை விட்டுவிட்டார்கள்.

நூல் : தஹ்ஃதீபுத் தஹ்ஃதீப் எண்:3/13
ஆசிரியர் : இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹ்மதுல்லாஹி அலைஹி

இப்னு சஃத் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள் :

ஹம்மாது இப்னு ஸலமா நம்பிக்கைக்குரியவர். நிறைய ஹதீஃத்களை அறிவித்தவர். ஆனால், சிலகட்டங்களில் மறுக்கத்தக்க ஹதீஃத்களையும் அறிவித்துள்ளார்.

நூல் : தஹ்ஃதீபுத் தஹ்ஃதீப் எண்:3/13

ஹம்மாது இப்னு ஸலமாவின் நூல்களில் அவரது உறவினரான இப்னு அபீ அவ்ஜாஃ என்பவர் இடைச்செருகல் செய்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

நூல் : தஹ்ஃதீபுத் தஹ்ஃதீப் எண்:3/13

மேற்கண்ட தகவல்களின் அடிப்படையில், ஹம்மாது இப்னு ஸலமாவின் அறிவிப்பிலுள்ள 'என் தந்தையும் உன் தந்தையும் நரகத்திலுள்ளனர்' என்று இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறியதாகவுள்ள வாசகம் இடைச்செருகலுக்குள்ளானது என்று கருத வாய்ப்புள்ளது. ஏனென்றால், மஃமர் அறிவிக்கும் இதே ஹதீஃதில் இந்த வாசகம் இல்லை

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

என்பது குறிப்பிடத்தக்கது.

அல்ஹாஃபிழ் அல்லாமா இமாம் சுயூத்தீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறுகிறார்கள் :

ஹதீஃத் அறிவிப்பதில் ஹம்மாத் இப்னு ஸலமாவை விட மஃமர் நம்பிக்கைக்குரியவர். ஹம்மாதுடைய மனன ஆற்றலில் குறைபாடுண்டு என்றும் அவருடைய ஹதீஃத்களில் சில மறுக்கப்படவேண்டியவையென்றும் ஹதீஃத் கலை இமாம்கள் கூறியுள்ளனர். எனவேதான், இமாம் புகாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தனது ஸஹீஹ் புகாரியில் இவர் அறிவித்த ஹதீஃதைப் பதிவு செய்யவில்லை. ஆனால், மஃமருடைய மனனசக்தியில் குறைவுள்ளது என்றோ அவரின் ஹதீஃத்கள் மறுக்கத்தக்கதென்றோ ஹதீஃத் துறை இமாம்கள் சொல்லவில்லை. இதனாலேயே இவர் அறிவிக்கும் ஹதீஃதை இமாம் புகாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஸஹீஹ் புகாரியில் கொண்டு வந்துள்ளார்கள்.

ஆதாரம் : இப்னு மாஜாவின் விரிவுரை நூலான ஹாஷியாஸின்தீ.

என் தந்தையும் உன் தந்தையும் நரகத்திலுள்ளனர் என்ற வாசகம் இடம்பெறாத வேறு ஹதீஃதும் உண்டு.

عَنْ اَبِيْ سَالِمٍ قَالَ جَاءَ اَعْرَابِيٌّ اِلَى النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَ يَارَسُوْلَ اللّٰهِ اِنَّ اَبِيْ كَانَ يَصِلُ الرَّحِمَ وَكَانَ وَكَانَ فَاَيْنَ هُوَ قَالَ فِى النَّارِ قَالَ فَكَاَنَّهُ وَجَدَمِنْ ذٰلِكَ فَقَالَ يَارَسُوْلَ اللّٰهِ فَاَيْنَ اَبُوْكَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

وَسَلَّمَ حَيْثُمَا مَرَرْتَ بِقَبْرِ مُشْرِكٍ فَبَشِّرْهُ بِالنَّارِ قَالَ فَاَسْلَمَ الْاَعْرَابِيُّ بَعْدُ. (رواه ابن ماجة ورواه الطبراني فى المعجم الكبير والبيهقى في دلائل النبوة وابونعيم في معرفة الصحابة عن سعد)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு கிராம வாசி வந்து கேட்டார்:

யாரஸூலல்லாஹ்! திண்ணமாக என்தந்தை உறவினர்களை அரவணைத்து வாழ்ந்து வந்தார். இன்னும் சில நற்காரியங்களையும் புரிந்தார். அவர் இப்போது எங்குள்ளார்?

இதற்கு பதிலளித்த இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவர் நரகத்திலுள்ளார் என்று கூறியவுடன் அக்கிராமவாசி மனமுடைந்தவராக தென்பட்டார். பின்பு கேட்டார் :

உங்கள் தந்தை எங்கேயுள்ளார்?

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதில் கூறினார்கள் :

இணைவைத்தவரின் கப்ரை கடந்து சென்றால், அவருக்கு நரகமுண்டு எனக்கூறுவீராக!

அக்கிராமவாசி பிறகு இஸ்லாத்தில் இணைந்து விட்டார்.

அறிவிப்பாளர்: அபூ ஸா-ம் ரழியல்லாஹுஅன்ஹு
நூல் : இப்னுமாஜா எண்:1562
அறிவிப்பாளர்:ஸஃது இப்னு அபீ வக்காஸ் ரழியல்லாஹுஅன்ஹு

நூற்கள்: தப்ரானி (கபீர்) எண்:330
பைஹகீ (தலாயில் நுபுவ்வா) எண்:105
அபூநுஅய்ம் (மஃரிஃபதுஸ்ஸஹாபா) எண்:522

வினா எழுப்பிய கிராமவாசி அவரது தந்தை நரகத்திலுள்ளார் என்ற செய்தியைக் கேட்டு மனமுடைந்து கவலை தோய்ந்தவராக இருக்கும்போது, என் தந்தை நரகத்தி-ல்லை என நேரடி பதிலை இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அளித்திருந்தால் அவரது துக்கமும் துயரமும் இன்னும் அதிகரித்திருக்கும். இதையுணர்ந்துதான், இணைவைத் தோர்க்கு மட்டுமே நரகம் என்று இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பொதுவாக சொல்-விட்டார்கள்.

2. ஹதீஃதின் அர்த்தம்:

ஹம்மாது இப்னு சலமா அறிவிக்கும் முஸ்-மில் இடம் பெற்ற ஹதீஃதில் ‘அப்’ எனும் சொல் பயன் படுத்தப்பட்டுள்ளது. ‘அப்’ என்ற வார்த்தைக்கு அரபிமொழியில், தந்தை, பெரிய தந்தை, சிறிய தந்தை மற்றும் பாட்டனார்-பூட்டனார் போன்ற விரிந்த பொருளுண்டு. இத்தகைய எல்லா அர்த்தங்களையும் உள்ளடக்கிய இறைமறை வசனத்தை கீழே காண்போம்.

اَمْ كُنْتُمْ شُهَدَاءَ اِذْ حَضَر يَعْقُوْبَ الْمَوْتُ اِذْ قَالَ لِبَنِيْهِ مَاتَعْبُدُوْنَ مِنْ بَعْدِيْ قَالُوْا نَعْبُدُ اِلٰهَكَ وَاِلٰهَ آبَائِكَ اِبْرَاهِيْمَ وَاِسْمَاعِيْلَ وَاِسْحَاقَ اِلٰهًاوَاحِدًا وَنَحْنُ لَهُ مُسْلِمُوْنَ

(البقرة : ١٣٣)

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

யஃகூபுக்கு மரணம் வந்த நேரத்தில் தனது பிள்ளைகளிடம், எனக்குப்பின் எதை வணங்குவீர்கள்? எனக்கேட்ட சமயத்தில் (அப்பிள்ளைகள்) உங்கள் இறைவனும் உங்கள் தந்தையரான இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக் ஆகியோரின் இறைவனுமாகிய ஒரேயொரு இறைவனையே வணங்குவோம். மேலும் நாங்கள் அவனுக்கே கட்டுப்பட்டவர்கள். என்று கூறியபோது நீங்கள் சாட்சியாளர்களாக இருந்தீர்களா?
(அல்குர்ஆன் - 2:133)

யஃகூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தந்தை இஸ்ஹாக் அலைஹிஸ்ஸாம், பெரிய தந்தை இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம், பாட்டனார் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் ஆகியோரைக் குறிக்க இவ்வசனத்தில் 'அப்' எனும் சொல் பிரயோகிக் கப்பட்டுள்ளது.

எனவே, என் தந்தை என்று இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியது அவர்களை ஈன்றெடுத்த அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைப்பற்றியல்ல. ஏனென்றல், எனது தந்தை சிறந்தவரென்றும், தூயோர் வழியாகவே நான் பிறந்துள்ளேன் என்றும் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (இந்த ஹதீஃத்கள் ஆதாரங்களுடன் இந்நூ-ல் கூறப்பட்டுள்ளன).

நரகத்திலுள்ளவரை சிறந்தவர் - தூயவர் என்று புகழாரம் சூட்டுவது பொருந்தாத ஒன்றாகும். ஆகவே,

இந்தஹதீஃதில் அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைப்பற்றி அண்ணலெம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிடவில்லையென்பது உள்ளங்கை நெல்-க்கனி.

அவ்வாறென்றால், இந்த ஹதீஃதில் 'தந்தை' என்பது எவரைக்குறிக்குமென்ற கேள்வி எழுகிறது. இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பெரிய தந்தையான அபூலஹபைக் குறிக்கிறதென்று 'நஜாது ஆபாயின்னபிய்யில் அத்ஹார்' என்ற நூ-ல் 136-வது பக்கத்தில் எழுதப்பட்டுள்ளது.

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

விவாதம் : 4

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் தாயும் தந்தையும் மரணித்த பின் கப்ரில் உயிர்கொடுக்கப்பட்டு ஈமான் கொண்டார்கள் என்ற செய்தி அவர்களிருவரும் ஈமான் இல்லாமல் மரணித்தார்கள் என்பதைத்தானே காட்டுகிறது?

விளக்கம் :

பெருமானாரின் பெற்றோர்களுக்கு உயிர் வழங்கப்பட்டு அவ்விருவரும் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை ஈமான் கொண்டனர். இந்நிகழ்வு ஹதீஃத்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

عَنْ عَائِشَةَ قَالَتْ قَالَ النَّبِيُّ صَلَى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ : ذَهَبْتُ لِقَبْرِ اُمِّيْ فَسَأَلْتُ رَبِّيْ اَنْ يُحْيِيَهَا فَاَحْيَاهَا فَآمَنَتْ بِيْ

(ذكره السيوطي فى اللآلي المصنوعة والشوكاني فى الفوائد المجموعة وابن شاهين في ناسخ الحديث ومنسوخه)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்:

என் தாயாரின் கப்ருக்கருகில் சென்றேன். அவர்களை உயிர்த்தெழவைக்க என்னிறைவனிடம் வேண்டுகோள் வைத்தேன். அவன் என்தாயாருக்கு உயிர்கொடுத்தான். அவர்கள் என்னை ஈமான் கொண்டார்கள்.

அறிவிப்பாளர் : ஆயிஷா ரழி யல்லாஹு அன்ஹா
நூற்கள் : சுயூதி - (லஆலீ மஸ்னூஆ) 1/138
ஷவ்கானி (ஃபவாயித் மஜ்மூஆ) எண் : 322
இப்னுஷாஹின் (நாஸிஃக் மன்ஸூஃக்) எண் : 155

عَنْ عَائِشَةَ اَنَّ رَسُوْلَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ سَأَلَ رَبَّهُ اَنْ يُحْيِيَ اَبَوَيْهِ فَاَحْيَاهُمَا لَهُ فَآمَنَا بِهِ ثُمَّ اَمَاتَهُمَا

(اللالي المصنوعة وكشف الخفاء)

திண்ணமாக இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தன்பெற்றோரை உயிர்த்தெழ வைக்குமாறு இறைவனிடம் கேட்டார்கள். அவ்விருவருக்கும் இறைவன் உயிர்கொடுத்தான். இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை அவ்விருவரும் ஈமான் கொண்டனர். பிறகு இறைவன் அவ்விருவரையும் மரணிக்க வைத்துவிட்டான்.

அறிவிப்பாளர் : ஆயிஷா ரழி யல்லாஹு அன்ஹா
நூற்கள் : லஆலீ மஸ்னூஆ - 1/143
கஷ்ஃபுல் ஃகஃபா - 1/61

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் அன்புத்தாயாரையும் அருமைத்தந்தையாரையும் இறைவன் உயிர்த்தெழுப்பி ஈமான் கொள்ளும் நற்பேற்றினை இறைவன் வழங்கினான். இவ்வாறு இறைவன் செய்தது அவ்விருவரும் இறைமறுப்பாளர்களாக மரணித்தார்கள் என்பதற்காக அன்று. ஏனெனில், அவர்கள் இறைநம்பிக்கை

யாளர்களாகவே வாழ்ந்தனர் என்பதை பல்வேறு ஹதீஃத்களில் நாம் பார்த்தோம். மறுபடியும் ஈமான் கொண்டதற்கான காரணியையும் தெரிந்து கொள்வோம்.

பெருமானாரின் பெற்றோர் இறைநம்பிக்கையாளர் களாக வாழ்ந்தபோதிலும் அவர்கள் உம்மதே முஹம்மதிய்யாவைச் சார்ந்தவர்களல்ல. ஏனென்றால், முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருத்தூதராக மக்களுக்கு இறைவனால் அடையாளம் காட்டப்படுவதற்கு முன்பே அவர்களிருவரும் மரணித்து விட்டனர்.

உம்மதே முஹம்மதியாவை இறைவன் திருமறையில் புகழ்ந்து பேசுகிறான்.

كُنْتُمْ خَيْرَ أُمَّةٍ (ال عمران : ١١٠)

நீங்கள் மிகச்சிறந்த சமுதாயமாக உள்ளீர்கள்.
(அல்குர்ஆன் - 3 : 110)

சீரும் சிறப்பும் அருமையும் பெருமையும் ஒருங்கே நிறையப்பெற்ற உம்மதே முஹம்மதிய்யாவில் இருக்கிற நற்பேறு நபிகளாரின் பெற்றோர்க்கு கிடைக்க வேண்டுமென இறைவன் விரும்பினான். ஆகவேதான், அவர்களுக்கு உயிர் வழங்கி நாயகக்கண்மணி **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஈமான் கொள்கிற நல்லருளை நல்கினான்.**

மேற்கண்ட ஹதீஃத்களில், இறைவனையும், என்னையும் என் பெற்றோர் ஈமான் கொண்டனர் என்று இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறவில்லை. என்னை ஈமான் கொண்டனர் என்று மட்டுமே சொன்னார்கள். இதி-ருந்து இறைவனைப்பற்றிய நம்பிக்கை அண்ணலாரின் அருமைத்தாய்-தந்தைக்கு அவ்விருவரின் மரணத்திற்கு முன்பே இருந்துள்ளது என்பது குன்றி-ட்ட விளக்காகும்.

மேற்கூறப்பட்ட ஹதீஃதை இமாம் இப்னு ஷாஹின் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தனது நாஸிஃக் மன்ஸூஃக் எனும் நூ-ல் கொண்டுவந்துள்ளது ஒரு அழகிய கருத்தை அற்புதமாக தெளிவு படுத்துகிறது. பூமான் நபியின் பெற்றோரை மேலோட்டப்பார்வையில் குறைவுபடுத்துவதுபோலமைந்த ஹதீஃத்களனைத்தும் மேற்கண்ட ஹதீஃத் மூலம் மாற்றப்பட்டுவிட்டன என்பதே அக்கருத்தாகும்.

இமாம் குர்துபீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தஃத்கிரா எனும் நூ-ல் கூறுகிறார்கள் :

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சிறப்புகள் மற்றும் தனித்துவங்கள் அவர்களின் இவ்வுலக மறைவு வரை தொடர்ந்து கொண்டு தானிருந்தன. அவ்வகையில் பார்க்கும்போது, அவர்களின் தாய் - தந்தை உயிர்த்தெழுந்து ஈமான் கொண்ட நிகழ்ச்சி அறிவுபூர்வமாக சிந்தித்தாலும், மார்க்க அடிப்படையில் பார்த்தாலும் சாத்தியமான ஒன்றுதான் என்று நன்கு புரிந்து கொள்ளமுடியும்.

ஏனென்றால், பனூ இஸ்ராயீலைச் சார்ந்த ஒருவன் கொல்லப்பட்ட பிறகு அவனுக்கு உயிர் கொடுக்கப்பட்டது. உயிர்பெற்ற அவன் கொலைகாரன்

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

யாரென்று அறிவித்த செய்தி குர்ஆனில் இடம் பெற்றுள்ளது (பார்க்க அல்குர்ஆன் - 2 : 73)

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறந்தோர்களை உயிர்த்தெழச் செய்தார்கள் என்ற விவரமும் குர்ஆனில் கூறப்பட்டுள்ளது.
(பார்க்க அல் குர்ஆன் - 3 : 49)

எனவே, இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்** அவர்களின் பெற்றோர் உயிர் பெற்று ஈமான் கொள்ளுதல் அசாத்தியமான ஒன்றல்ல. இது இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பெருமையை மேலும் கூட்டுகிறது.

நூற்கள் : மவாஹிப் லதுன்னிய்யா
லஆலீ மஸ்னூஆ
கஷ்ஃபுல் ஃகஃபா

பெருமானாரின் அன்புத்தாயாரும் அருமைத்தந்தையும் மறுமை ஈடேற்றத்தைப் பெற்றவர்கள் என பல்வேறு இஸ்லாமிய. மார்க்க அறிஞர்கள் கூறியுள்ளனர்.

நபிகளாரின் குடும்பத்தைச் சார்ந்த முன்னோர்கள் பாவ அழுக்கி-ருந்தும் இணைவைத்தல் என்ற அசுத்தத்தி-ருந்தும் தூய்மையாவைர்கள் என்பதே இதற்கு காரணமாகும்.

இமாம் குர்துபீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் கூற்று:

திண்ணமாக இறைவன் பெருமானாரின் பெற்றோரை உயிர்ப்பித்து ஈமான் கொள்ள வைத்தான்.

இது சம்பந்தப்பட்ட ஹதீஃத் இட்டுக்கட்டப் பட்டதல்லவா? என்று என்னிடம் நீ வினா தொடுத்தால் நான் உனக்கு பதில் சொல்வேன்:

இந்த ஹதீஃத் இட்டுக்கட்டப்பட்டதல்ல பலவீனமான ஹதீஃத் வகையைச் சார்ந்ததே.

நூல்: ஷரஹுல் அஷ்பாஹ்வன்னளாயிர் - 5/491

ஹாஃபிழ் நாஸிருத்தீன் திமஷ்கீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் கூற்று:

நபிகளாரின் தாயும் தந்தையும் உயிர்பெற்று ஈமான் கொண்ட ஹதீஃத் பலவீனமானதுதானே தவிர புனையப்பட்டதல்ல.

நூல்: ஷரஹுல் அஷ்பாஹ்வன்னளாயிர் - 5/491

பலவீனமான ஹதீஃதை ஏற்கமாட்டோம் என வஹ்ஹாபிகள் அடம்பிடித்தால் தொழுகையில் நெஞ்சின் மீது கைகட்டுவதை விட்டுவிடவேண்டும். ஏனென்றால் அது சம்பந்தப்பட்ட ஹதீஃத் பக்கா பலவீனமானது. இந்நூ-ன் இறுதிப்பகுதியில் இவ்விவரம் கூறப்பட்டள்ளது.

விவாதம்: 5

ஒருவர் உயிருடன் வாழும்போது ஈமான் கொண்டால் அது அவருக்கு பயனளிக்கும். ஆனால், மரணித்தபிறகு ஈமான் கொள்வது அவருக்கு பலனளிக்குமா?

விளக்கம்:

இறைவன் நாடினால் உறுதியாக பயனளிக்கும். முடிந்துபோன சட்டத்தை புதுப்பிக்க முடியுமென்பதற்கு கீழ்க்காணும் ஹதீஃத் ஆதாரமாகத் திகழ்கிறது.

عَنْ اَسْمَاءَ بِنْتِ عُمَيْسٍ اَنَّ رَسُوْلَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ الظُّهْرَ بِالصَّهْبَاءِ ثُمَّ اَرْسَلَ عَلِيًّا فِيْ حَاجَةٍ فَرَجَعَ وَقَدْ صَلَّى النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اَلْعَصْرَ فَوَضَعَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ رَأَسَهُ فِيْ حِجْرِ عَلِيٍّ فَنَامَ فَلَمْ يُحَرِّكْهُ حَتّٰى غَابَتِ الشَّمْسُ فَقَالَ النَّبِيُّ صَلَى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ : اَللّٰهُمَّ اِنَّ عَبْدَكَ عَلِيًّا اِحْتَبَسَ بِنَفْسِهٖ عَلٰى نَبِيِّهٖ فَرُدَّ عَلَيْهِ الشَّمْسَ قَالَتْ فَطَلَعَتْ عَلَيْهِ الشَّمْسُ حَتّٰى رُفِعَتْ عَلَى الْجِبَالِ وَعَلَى الْاَرْضِ وَقَامَ عَلِيٌّ فَتَوَضَّأَ وَصَلَّى الْعَصْرَ ثُمَّ غَابَتْ وَذٰلِكَ بِالصَّهْبَاءِ

(رواه الطبراني فى الكبير وابن عساكر والشوكاني فى الفوائد المجموعة)

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹ்பா என்னுமிடத்தில் லுஹ்ரைத் தொழுதுவிட்டு அ- ரழியல்லாஹு அன்ஹு அவர்களை ஒரு தேவையின் நிமித்தம் அனுப்பிவைத்தார்கள். அவர்கள் திரும்பி வந்தபோது இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அஸ்ர் தொழுதுகொண்டிருந்தார்கள். (தொழுகையை நிறைவேற்றிய பின்) அ- ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மடிமீது தலை வைத்து உறங்கினார்கள், அவர்களை அ- ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எழுப்பிவிடவில்லை. சூரியனும் மறைந்து விட்டது. பிறகு (எழுந்து) கூறினார்கள் :

இறைவனே! நிச்சயமாக உன் அடியார் அ- ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இறைத்தூதருக்கு பணியாற்றுவதில் அகப்பட்டுக் கொண்டார். ஆகவே, அவருக்காக சூரியனை திருப்பியனுப்பு !

(மறைந்த) சூரியன் திரும்பிவந்து மலைகளுக்கு மேலாக உயர்ந்தது. அ- ரழி யல்லாஹு அன்ஹு அவர்கள் எழுந்து உளூ செய்து விட்டு அஸ்ரைத் தொழுதார்கள். பின்பு சூரியன் மறைந்து விட்டது. ஸஹ்பா எனுமிடத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

அறிவிப்பாளர் : அஸ்மா பின்த் உமைஸ் ரழி யல்லாஹு அன்ஹா

நூற்கள் : தப்ரானீ (கபீர்) எண் : 19861
இப்னு அஸாகிர் எண் : 17369
: ஷவ்கானீ (ஃபவாயித் மஜ்மூஆ) எண் : 1088

சூரியன் மறைந்துவிட்டால் அஸ்ர் தொழுகை கழாவாகிவிடும். மறைந்த சூரியனை இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தன்பிரார்த்தனையின் மூலம் திருப்பிக் கொண்டு வருகிறார்களென்றால் கழாவான தொழுகையை அதாவாக மாற்றியமைப்பதற்குத்தான். முடிந்த சட்டம் இங்கே புதுப்பிக்கப்படுகிறது. இதை மறுத்து, தொழுகை கழாவாகத்தான் நிறைவேற்றப்படுமென்று எவராவது கூறினால், சூரியன் திரும்பிவந்ததில் அர்த்தமே இல்லாமல் போய்விடும்.

ஏனென்றால், கழாவாக தொழுவதென்பது சூரியன் மறைந்தபிறகும் இயலும். இந்நிலையில் சூரியன் மீட்டப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

பனூ இஸ்ராயீலைச் சேர்ந்த கொல்லப்பட்ட ஒரு மனிதர் உயிர்த்தெழுந்து கொலைகாரன் யாரென்று அறிவித்ததை ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.
(பார்க்க அல்குர்ஆன் - 2 : 73)

எனவே இறைவன் நாடினால் இதுபோன்று நடக்குமென்று நம்புவது இறைநம்பிக்கையாளரின் கடமையாகும்.

விவாதம்: 6

இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்னோர் அனைவரும் இறைநம்பிக்கையாளர்களென்று ஒப்புக் கொள்ள முடியாது. ஏனென்றால், இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தந்தை 'ஆஜர்' என்பவர் சிலைவழிபாடு செய்பவராக இருந்தார்.**

விளக்கம்:

இறைவன் கூறினான் :

وَاِذْ قَالَ اِبْرَاهِيْمُ لِاَبِيْهِ آزَرَ اَتَتَّخِذُ اَصْنَامًا آلِهَةً اِنِّيْ اَرٰكَ وَقَوْمَكَ فِيْ ضَلَالٍ مُّبِيْنٍ (الانعام : ٧٢)

சிலைகளையா கடவுள்களாக ஆக்குகிறீர்கள்? திண்ணமாக நான் உங்களையும் உங்கள் சமுகத்தையும் பகிரங்க வழிகேட்டில் பார்க்கிறேன். என்று இப்ராஹீம் தன் தந்தை ஆஜருக்கு கூறிய சமயத்தை (நினைவு கூறும்) (அல்குர்ஆன் - 6 : 74)

இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள 'அப்' எனும் சொல் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஈன்ற தந்தையாரைக் குறிப்பிடவில்லை. அவரின் பெரிய தந்தையையே அறிவிக்கிறது. ஏனென்றால் **'ஆஜர்' என்பது இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பெரிய தந்தையின் பெயர். அவர்களை பெற்றெடுத்த தந்தையின் பெயர் 'தாரஃக்' என்பதாகும்.**

அரபி மொழியில், 'அப்' என்ற வார்த்தைக்கு தந்தை என்ற அர்த்தமுண்டு. அதுபோலவே, சிறிய

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

தந்தை, பெரியதந்தை மற்றும் பாட்டனார் என்ற அர்த்தங்களும் உண்டு.

இறைவன் கூறினான் :

யஃகூபுக்கு மரணம் வந்த நேரத்தில் தன் பிள்ளைகளிடம் எனக்குப்பின் எதை வணங்குவீர்கள்? எனக்கேட்டபோது நீங்கள் சாட்சியாளர்களாக இருந்தீர்களா? (அப்பிள்ளைகள்) கூறினார்கள் : உங்கள் இறைவனும் உங்கள் தந்தையரான இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக் ஆகியோரின் இறைவனுமாகிய ஒரேயொரு இறைவனையே வணங்குவோம். மேலும், நாங்கள் அவனுக்கே கட்டுப்பட்டவர்கள்.

(அல்குர்ஆன் - 2 : 133)

இந்த வசனத்தில், ‘அப்’ என்ற சொல் மேற்கூறப்பட்ட அனைத்து அர்த்தங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆஜர் என்பவர் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சொந்த தந்தையல்ல என்பதற்கு நான்கு காரணிகளைக் கூறலாம்.

முதற்காரணி:

இமாம் ஃபஃக்ருத்தீன் ராஜீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ‘அஸ்ராருத் தன்ஜீல்’ என்ற நூ-ல் அற்புதமான விளக்கமளிக்கிறார்கள் :

திண்ணமாக ‘ஆஜர்’ என்பவர் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஈன்றெடுத்த தந்தையார் அல்ல. அவர்களின் பெரிய தந்தையே.

இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்னோர்கள் இறைமறுப்பாளர்களாக இருந்ததில்லை. மாறாக இறைவணக்கமுடையவர்களாகத்தான் இருந்துள்ளனர். இதற்கு சான்று இறைவனது கூற்று** :

اَلَّذِىْ يَرَاكَ حِيْنَ تَقُوْمُ وَتَقَلُّبَكَ فِى السَّاجِدِيْنَ

(الشعراء : ٢١٨، ٢١٩)

நீங்கள் நிற்கும்போது உங்களையும் (இறைவனை)வணங்குவோர்களிடையே நீங்கள் புரண்டு வந்ததையும் அ(வ்விறை)வன் பார்க்கிறான்.

(அல்குர்ஆன் - 26 : 218, 219)

مَعْنَاهُ اَنَّهُ كَانَ يَنْتَقِلُ نُوْرُهُ مِنْ سَاجِدٍ اِلٰى سَاجِدٍ

இவ்வசனத்தின் கருத்து :

இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பேரொளி இறைவணக்கமுள்ளவர்கள் வழியாகவே வந்து கொண்டிருந்தது.**

இரண்டாம் காரணி:

இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்** :

தூய்மையான தந்தைமார்களின் முதுகந்தண்டி-ருந்து பரிசுத்தமான தாய்மார்களின் கருவறைக்கு நான் திருப்பப்பட்டுக் கொண்டேயிருந்தேன்.

அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் ரழி யல்லாஹு அன்ஹு
நூற்கள் : அபூநுஅய்ம் (தலாயில் நுபுவ்வா) எண் : 15
இப்னு அஸாகிர் எண் : 1217
துர்ருல் மன்ஃதூர் எண் : 3/294

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்னோர் அனைவரும் பரிசுத்த மானவர்களென்று இந்த நபி மொழி அறிவிக்கிறது. ஆனால், இணைவைக்கக்கூடியவர்கள் அசுத்தமானவர் களென்பது திருமறையின் தீர்ப்பு.**

இறைவன் கூறினான் :

يَاَيُّهَاالَّذِيْنَ آمَنُوْا اِنَّمَا الْمُشْرِكُوْنَ نَجَسٌ (التوبة : ٢٨)

உறுதியாக இணைவைப்போரெல்லாம் அசுத்தமானவர்களே. (அல்குர்ஆன் - 9 : 28)

இவ்வசனத்தின்படி தூய்மையானவர்களாக உள்ள இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்னோர் எவரும் இணைவைப்போராக நிச்சயம் இருந்திருக்க முடியாது.**

மூன்றாம் காரணி:

இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உரைத்தார்கள்** :

நான் சிறந்தோர் வழியாகவே வந்துள்ளேன்.

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு

நூற்கள் : தப்ரானி (கபீர்) எண் : 13474
ஹாகிம் எண் : 7053
பைஹகீ (தலாயில்நுபுவ்வா) எண் : 3/294

இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்** :

மக்கள் இருபிரிவினராக பிரிகின்றபோது அவற்றில் சிறந்த பிரிவில் இறைவன் என்னை

அமைத்தான்.

அறிவிப்பாளர் : அனஸ் ரழியல்லாஹு அன்ஹு

நூல் : பைஹகீ (தலாயில் நுபுவ்வா) எண் : 81

இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்** :

ஆதமுடைய பிள்ளைகளில் தலை முறை தலைமுறையாக இப்போது நானிருக்கும் தலைமுறை வரை சிறந்தோர் வழியாக நான் அனுப்பப்பட்டேன்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு

நூல் : புகாரீ எண் : 3293

மேற்கண்ட ஹதீஃத்களி-ருந்து இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அனைத்து முன்னோர்களும் இறைநம்பிக்கையாளர் கள்தான் என்று வெள்ளிடை மலையெனத் தெரிய வருவதால் ஆஜர் என்பவர் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஈன்றெடுத்த தந்தையல்ல என்பதை உறுதியாகப் புரிந்து கொள்கிறோம்.**

சிறந்தோர் வழியாக நபியவர்கள் வந்தார் களென்பது உண்மைதான். ஆனால் அம்முன் னோர்களெல்லாம் இறை மறுப்பாளர்களே என்று எவராவது கூறினால், இறைமறுப்பாளர்களை சிறந்தவர்கள் என்று இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் என்ற தவறான வாதத்தை முன் வைக்கிறார் என்றாகிவிடும். ஏனெனில், இறைமறுப்பாளர் ஒருபோதும் சிறந்தவராக முடியாது. சிறந்தவர்**

ஒருக்காலும் இறைமறுப்பாளராக இருக்க இயலாது.

நான்காம் காரணி:

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைப்பணியாற்றிய துவக்கத்தில் ஆஜருக்கு பாவமன்னிப்புத் தேடினார்கள். இறைவன் அதைத் தடுத்துவிட்டான். இதன் பிறகு ஆஜருக்கு பாவமன்னிப்புக் கோருவதை தவிர்த்து விட்டார்கள்.

இறைவன் அருள்மறையில் கூறுகிறான்:

وَمَا كَانَ اسْتِغْفَارُ اِبْرَاهِيْمَ لِاَبِيْهِ اِلَّا عَنْ مَوْعِيَدةٍ وَعَدَهَا اِيَّاهُ فَلَمَا تَبَيَّنَ لَهُ اَنَّهُ عَدُوٌّ لِلّٰهِ تبرَّأَ مِنْهُ (التوبة : ١١٤)

இப்ராஹீம் தம் தந்தைக்கு பாவமன்னிப்புத் தேடியது அவருக்கு தாம் வழங்கியிருந்த வாக்குறுதியின் காரணமாகவே. ஆனால், தம்முடைய தந்தை அல்லாஹ்விற்குப் பகைவர் எனத் தெளிவான போது இப்ராஹீம் தம் தந்தையைவிட்டும் விலகிக் கொண்டார். (அல்குர்ஆன் - 9 : 114)

இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் புனித இல்லம் கஃபாவை எழுப்பிய பின்னர் முக்கியமான சில பிரார்த்தனைகளை செய்தார்கள். அவற்றுள் ஒன்று தன்னை பெற்ற தாய்க்கும் தந்தைக்கும் பாவமன்னிப்புத் தேடிய பிரார்த்தனையாகும்.

رَبَّنَا اغْفِرْلِيْ وَلِوَالِدَيَّ وَلِلْمُؤْمِنِيْنَ يَوْمَ يَقُوْمُ الْحِسَابُ

(ابراهيم : ٤١)

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

எங்கள் இறைவனே ! எனக்கும், என் தாய்-தந்தைக்கும் இறைநம்பிக்கையாளர்களுக்கும் கணக்கு கேட்கப்படும் நாளில் மன்னிப்பு வழங்குவாயாக! (அல்குர்ஆன்-14:41)

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தந்தைக்கு பாவமன்னிப்புக் கோருவதை விட்டுவிட்டார்கள் என (9:114) வசனத்தில் கூறிய இறைவன், (14:41) என்ற வசனத்தில் தந்தைக்கு பாவமன்னிப்புத் தேடினார்கள் என்று குறிப்பிடுவதன்மூலம் இருவரும் வெவ்வேறானவர்கள் என்பதை அறிய முடிகிறது.

(9:114) வசனத்தில் தந்தைக்கு பிழைபொறுக் கத்தேடுவதை இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் நிறுத்திவிட்டார்கள் என்று இறைவன் இயம்பிய செய்தி அவர்கள் இறைப்பணியாற்றிய தொடக்கத்தில் நிகழ்ந்ததாகும். தந்தைக்கு பிழைபொறுக்கக் கோரினார்கள் என (14:41) வசனத்தில் இறைவன் உரைத்தது இறைப்பணியின் இறுதியில் நிகழ்ந்த செய்தியாகும். ஏனெனில், இது இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கஃபாவை கட்டியபிறகு புரிந்த பிரார்த்தனை.

எனவே, (9:114) வசனத்தில் கூறப்பட்டதந்தை வேறு. அவர் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பெரிய தந்தை ஆஜர். (14:41) வசனத்தில் சொல்லப்பட்ட தந்தை வேறு. அவர் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஈன்ற அருமைத்தந்தையார் தாரஃக் என்பவராவார்.

விவாதம் :

இமாம் அழஹனீஃபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தனது 'ஃபிக்ஹுல் அக்பர்' எனும் நூ-ல், பெருமானாரின் பெற்றோர் குஃப்ரில் மரணமடைந்தார்கள் என்று எழுதப்பட்டுள்ளதே! அதன் விளக்கமென்ன?

விளக்கம் :

மேற்கண்ட நூ-ல் 'மாதா அலல்குஃப்ரி', பெருமானாரின் பெற்றோர் குஃப்ரில் மரணமடைந்தார்கள் என்ற வாசகம் உள்ளது. இதற்கு இரு விளக்கங்கள் உண்டு.

1. இவ்வாசகம் ஃபிக்ஹுல் அக்பர் என்ற நூ-ல் இடைச்செருகல் செய்யப்பட்டதாகும். இறை வனின்மீதும் இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்மீதும் தீயவர்கள் இட்டுக் கட்டியதைப்போலவே இமாம்களின் மீதும் சிலர் இட்டுக்கட்டினார்கள்.**

போற்றுதலுக்குரிய இமாம்களின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்க விரும்பிய பொறாமைக் காரர்கள்தான் புனைந்துரைக்கும் ஈனச்செயலை செய்தார்கள். இருப்பதை வெட்டுவதும் இல்லாததை ஒட்டுவதும் இவர்களுக்கு கைவந்த கலையாகும்.

வழிகேடர்கள் தமது தீய கொள்கைகளை மக்களின் நன்மதிப்பைப் பெற்ற இமாம்களின் பெயரில் பரவவிட்டு தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வழக்கம் முன் காலத்தில் நிறையவே இருந்தது. நேரடியாக கெட்ட

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

கொள்கைகளைக் கூறினால் மக்களுக்கு மத்தியில் அது எடுபடாமல் போய்விடும். தமது மார்க்க வியாபாரமும் சரியாக நடைபெறாமல் நஷ்டம் ஏற்பட்டுவிடும். இதனால் தான் இமாம்கள் பெயரில் இட்டுக்கட்டி சொல்லும் இழிசெய-ல் அவர்கள் ஈடுபட்டார்கள்.

இதன் வழியிலேயே, இமாம் அபூஹனீஃபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் ஃபிக்ஹுல் அக்பர் என்ற நூ-ல் பெருமானாரின் பெற்றோர் குஃப்ரில் மரணமடைந்தார்கள் என்ற வாசகத்தை சிலர் புகுத்தி விட்டார்கள் என்பதே உண்மை.

2. அவ்வாசகம் 'ஃபிக்ஹுல் அக்பர்' என்ற நூ-ல் இடம்பெற்றுள்ளது என்பதை ஒரு பேச்சுக்காக ஒப்புக்கொண்டாலும், பெருமானாரின் பெற்றோர் இறைமறுப்பாளர்களாக மரணித்தார்கள் என்பதாக அந்நூ-ன் வாசகம் அமையவில்லை. அப்பொருளில் கூறுவதாக இருந்தால், 'மாதா காஃபிரய்னி' என்றிருக்கவேண்டும்.

ஆனால், இத்தகைய வாக்கியம் அந்நூ-ல் இல்லை. 'மாதா அலல் குஃப்ரி', என்றுதான் எழுதப்பட்டுள்ளது. குஃப்ரின் காலகட்டத்தில் மரணித்தார்கள் என்றே இங்கே அர்த்தம் காணவேண்டும். ஏனென்றால், அலல் குஃப்ரி என்பது அலா ஜமனில் குஃப்ரி என்பதின் சுருக்கமாகும்.

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

ஃபத்ரத் கால மக்கள் நிலை :

'ஃபத்ரத்' என்பது இறைத்தூதர் எவரும் அனுப்பப்படாத காலகட்டத்திற்கு கூறப்படும். அந்த இலக்கணத்தின்படி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மறைவி-ருந்து முஹம்மது **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லாம் அவர்கள் இறைத்தூதராக அறிமுகப்படுத்தும் வரையுள்ள இடைப்பட்ட காலத்திற்கும் 'ஃபத்ரத்' என்று சொல்லப்படும். ஏனென்றால் இருவருக்கு மத்தியில் எந்த இறைத்தூதரும் அனுப்பப்படவில்லை. இக்காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு தண்டனையில்லை என்று கீழ்க்காணும் வசனங்கள் அறிவிக்கின்றன.**

இறைவன் கூறினான்:

وَمَا كُنَّا مُعَذِّبِيْنَ حَتّٰى نَبْعَثَ رَسُوْلًا (بنواسرائيل : ١٥)

தூதரை நாம் அனுப்பாத வரை எவரையும் வேதனை செய்வதில்லை. (அல்குர்ஆன் - 17 : 15)

وَلَوْلَا اَنْ تُصِيْبَهُمْ مُصِيْبَةٌ بِمَا قَدَّمَتْ اَيْدِيْهِمْ فَيَقُوْلُوْا رَبَّنَا لَوْلَا اَرْسَلْتَ اِلَيْنَا رَسُوْلًا فَنَتَّبِعَ آيَاتِكَ وَنَكُوْنَ مِنَ الْمُؤْمِنِيْنَ. (القصص : ٤٧)

மேலும் (நாம் இவ்வாறு செய்தது) அவர்கள் செய்த தீயவைகளின் காரணமாக எதாவது துன்பம் அவர்களுக்கு வந்தால், எங்கள் இறைவனே! நீ ஒரு தூதரை எங்களிடம் அனுப்பியிருந்திருக்கக் கூடாதா? நாங்கள் உன்னுடைய வசனங்களைப் பின்பற்றி இறைநம்பிக்கையாளர்களில் ஆகியிருப்போமே! என்று அவர்கள் கூறாமல் இருப்பதற்காகத்தான்.
(அல்குர்ஆன் - 28 : 47)

وَلَوْ اَنَّا اَهْلَكْنٰهُمْ بِعَذَابٍ مِّنْ قَبْلِهٖ لَقَالُوْا رَبَّنَا لَوْلَآ اَرْسَلْتَ اِلَيْنَا رَسُوْلًا فَنَتَّبِعَ اٰيٰتِكَ مِنْ قَبْلِ اَنْ نَّذِلَّ وَنَخْزٰى (طه : ١٣٤)

அந்த (இறைத்தூதரின்) வருகைக்குமுன்பே ஏதாவதொரு வேதனையின் மூலம் அவர்களை நாம் அழித்திருந்தால் அப்போது அவர்கள் கூறியிருப்பர்: எங்கள் இறைவனே! எங்களிடம் ஒரு தூதரை அனுப்பியிருக்கக் கூடாதா? நாங்கள் இழிவடைந்து அவமானத்திற்குள்ளாகுவதற்கு முன்னால் உன் வசனங்களைப் பின்பற்றியிருப்போமே!
(அல்குர்ஆன் - 20 : 134)

وَمَا كَانَ رَبُّكَ مُهْلِكَ الْقُرٰى حَتّٰى يَبْعَثَ فِيْٓ اُمِّهَا رَسُوْلًا يَتْلُوْ عَلَيْهِمْ آيَاتِنَا (القصص : ٩٥)

மேலும் உம் இறைவன் ஊர்களை அழிப்பவனாக இருந்ததில்லை. அவற்றின் மத்தியில் மக்களுக்கு நமது வசனங்களை ஓதிக்காட்டும் தூதரை அனுப்பாதவரை. (அல்குர்ஆன் - 28 : 59)

وَمَا اَهْلَكْنَا مِنْ قَرْيَةٍ اِلَّا لَهَا مُنْذِرُوْنَ ذِكْرٰي وَمَا كُنَّا ظَالِمِيْنَ (الشعراء : ٢٠٨، ٢٠٩)

நாம் எவ்வூரையும் அழித்ததில்லை. எச்சரிக்கை விடுப்போர் அவ்வூருக்கு வந்து நல்லுரை வழங்காத வரை. மேலும், நாம் அநியாயம் புரிவோராகவுமில்லை.
(அல்குர்ஆன் - 26 : 208, 209)

இறைத்தூதர் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தாயும் தந்தையும் ஃபத்ரத் காலத்தி லுள்ளவர்கள் என்பதால் மேற்கண்ட வசனங்களின் அடிப்படையில் அவ்விருவரும் நரகத்திற்குரியவர்கள் அல்லர் என்று வெள்ளை வெளேரென பளிச்சென்று தெரிகிறது.**

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

எச்சரிக்கை:

நாயகக்கண்மணி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெருமைக்குரிய பெற்றோர் விஷயத்தில் நல்லவற்றை மட்டுமே கூறவேண்டும். இல்லை யெனில் மௌனமாகயிருக்க வேண்டும். இது இறைநம்பிக்கையாளர்களின் கடமையாகும்.

عَنْ اَبِي هُرَيْرَةَ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ :
مَنْ كَانَ يُؤْمِنُ بِاللّٰهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلْيَقُلْ خَيْرًا اَوْلِيَصْمُتْ

(رواه البخاري ومسلم)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் :

இறைவனையும் மறுமை நாளையும் ஒருவர் நம்பிக்கைக் கொண்டிருந்தால் நல்லதை (மட்டுமே) பேசட்டும். அல்லது அமைதியாக இருக்கட்டும்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா ரழியல்லாஹுஅன்ஹு
நூற்கள்: புகாரி எண்:5560
முஸ்-ம் எண்:67

عَنْ ابْنِ عُمَرَ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ
اُذْكُرُوْا مَحَاسِنَ مَوْتَاكُمْ

(رواه ابوداؤد والترميذي والطبراني والحاكم)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இயம்பினார்கள் :

உங்களில் இறந்து போனவர்களின்

நல்லவைகளை கூறுங்கள்!

அறிவிப்பாளர்: இப்னு உமர் ரழியல்லாஹுஅன்ஹு
நூற்கள்: அபூதாவூத் எண்:4254
திர்மிதீ எண்:940
ஹாகிம் எண்:1372
தப்ரானி (கபீர்) எண்:13598

عَنْ عَائِشَةَ قَالَتْ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ :
لَاتَذْكُرُوْا هَلْكَاكُمْ اِلَّا بِخَيْرٍ (رواه النسائى)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மொழிந்தார்கள் :

உங்கள் முன்னோர்களின் நல்லதை மட்டுமே கூறுங்கள்!

அறிவிப்பாளர்: ஆயிஷா ரழியல்லாஹுஅன்ஹா
நூல்: நசாயீ எண்:1909

عَنْ عَائِشَةَ قَالَتْ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ
لَاتَسُبُّوا الْاَمْوَاتَ (رواه البخاري)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள் :

இறந்து போனவர்களை தவறாகப் பேசாதீர்கள்

அறிவிப்பாளர்:ஆயிஷா ரழியல்லாஹுஅன்ஹா
நூல்கள்: புகாரீ எண்:1306

عَنِ الْمُغِيْرَةِ بْنِ شُعْبَةَ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ
وَسَلَّمَ : لَاتَسُبُّوا الْاَمْوَاتَ فَتُؤْذُوا الْاَحْيَاءَ (رواه الترمذى واحمد)

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள் :

இறந்தோர்களை தவறாகப்பேசுவதின் மூலம் வாழ்ந்து கொண்டிருப்போரை நோவினை செய்யாதீர்கள்!

அறிவிப்பாளர்: முஙீரா இப்னு ஷுஃபா ரழியல்லாஹுஅன்ஹு
நூற்கள்: திர்மிதீ எண்:1905
அஹ்மத் எண்:17499
இறைவன் கூறினான்:

والذين يؤذون رسول الله لهم عذاب اليم (التوبة : ٦١)

இறைத்தூதரை நோவினைசெய்யக்கூடியவர் களுக்கு கடும் வேதனை உண்டு.

(அல்குர்ஆன்-9:61)

ان الذين يؤذون الله ورسوله لعنهم الله فى الدنيا والاخرة واعدلهم عذابا مهينا (الاحزاب : ٥٧)

திண்ணமாக இறைவனையும், இறைத்தூதரையும் நோவினை செய்யக்கூடியவர்களை இம்மையிலும் மறுமையிலும் இறைவன் சபிக்கிறான். மேலும், இழிவுபடுத்தும் வேதனையையும் அவர்களுக்காக தயார் செய்து வைத்துள்ளான் (அல்குர்ஆன்-33:57)

மா-க் மத்ஹப் இமாம்களில் ஒருவரான காழீ அபூபக்ர் இப்னுல் அரபி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடம் வினவப்பட்டது:

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்னோர்கள் நரகத்திற்குரியவர்கள் எனக்கூறும் நபரின் நிலையென்ன?

இமாம் அவர்கள் பதிலுரைத்தார்கள் :

இவ்வாறு கூறுபவன் இறைவனால் சபிக்கப் பட்டவன். ஏனெனில் இறைவன் குர்ஆனில்,

இறைத்தூதரை நோவினை செய்யக்கூடியவர் களுக்கு கடும் வேதனை உண்டு.

(அல்குர்ஆன்-9:61)

எனக் கூறியுள்ளான். இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தந்தை நரகத்திற்குரியவர் என்று சொல்வதைவிட பெரிய நோவினை வேறெதுவும் இருக்க முடியாது.
நூற்கள்: நஜாது ஆபாயின்னபிய்யில் அத்ஹார் - பக்கம் :23
ஆசிரியர்: அஹ்மது ஸாயிஹ் ஹுஸைனீ

உமர் இப்னு அப்துல் அஜீஸ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடம் எழுத்தராக பணியாற்றிய ஒருவர், இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தந்தை காஃபிர் என்று கூறிவிட்டார். அவரை அப்பணியி-ருந்து நீக்கி, இவ்வாறு கூறுகின்ற நீ எனக்கு எழுத்தராக இனிமேல் பணியாற்ற வேண்டாமென உமர் இப்னு அப்துல் அஜீஸ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறிவிட்டார்கள்.
நூல் : ஷிஃபா :2/242
ஆசிரியர்: காழீ இயாழ் ரழியல்லாஹுஅன்ஹு

பெருமை கூட்டிட
பூமான் நபியின்
புனிதமிகு பெற்றோரை
பெரியவன் அல்லாஹ்
உயிர் கொடுத்தெழுப்பி
ஈமான் ஈந்தான்
பாசமிக்க நண்பனே!
பகிரங்கமாக பறைசாற்று!
ஹதீஃத் பலவீனமென
பகர் வோரும் உண்டு,
ஹதீஃத் பலவீனம். ஆனால்,
எழுப்பிய இறைவன்
வ-மைமிக்கவன் தானே!
ஏன்தான் இவர்கள்
இதை மறந்து போனார்கள்?

(அல்ஹாஃபிர் ஷம்சுத்தீன் இப்னு நாஸிருத்தீன் திமஷ்கீ)

(இக்கருத்து இடம் பெற்ற நூல் : மவாஹிப் லதுன்னிய்யா)

பூமான் நபியின் புனிதப் பெற்றோரை குறைவு படுத்தும் வார்த்தைகளை பயன்படுத்தாம-ருப்பது இறைநம்பிக்கையாளர்களின் இன்றிமையா கடமையாகும்.

பொதுவாக தாய் அல்லது தந்தையை யாராவது குறைவு படுத்திப் பேசினால் தனையனால் அதைப்பெருத்துக் கொள்ள முடியாது. இது மனித இயல்பு. இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் இது பொருந்தும்.

உத்தம நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

அவர்களின் உள்ளம் வேதனையடையும் எக்காரியத்தையும் எவரும் செய்யக்கூடாதென்று இறைவன் தடைசெய்கிறான்.

وَمَا كَانَ لَكُمْ اَنْ تُؤْذُوْا رَسُوْلَ اللّٰهِ (الاحزاب : ٥٣)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோவினை செய்ய உங்களுக்கு அனுமதியில்லை. (அலகுர்ஆன்: 23:53)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உள்ளம் வேதனைப்படும் அளவிற்கு நடந்து கொள்பவன் இருஉலகத்திலும் சாபத்திற்குரியவன் என்ற இறைவனின் கடும் எச்சரிக்கையை உணர்ந்து பெருமானாரின் பெற்றோர் விஷயத்தில் கடுஞ்சொல் பிரயோகத்தை வஹ்ஹாபிகள் கைவிட வேண்டும். இது மறுமைவெற்றிக்கு துணை செய்யும்.

வஹ்ஹாபிகள் தங்களை மாற்றிக்கொள்ளாமல், எங்கள் நிலையில் நாங்கள் உடும்பாகவே இருப்போமென அடம்பிடித்தால் இறைசாபத்தை சுமக்க தயாராகட்டும்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அன்புத்தாயும் அருமைத்தந்தையும் நல்லவர்கள், வல்லவர்கள், தூய்மையானவர்கள் மற்றும் சுவனவாசிகள் என்பது குன்றி-ட்ட விளக்காக இருந்தும் அவற்றை வஹ்ஹாபிகள் மறுக்கிறார் களென்றால் மறுமைத் தோல்வியை அவர்கள் தேர்ந்தெடுத்துவிட்டார்கள் என்றுதானே அர்த்தம்! உண்மையை உணர்வோம், பிறருக்கு உரைப்போம். மறுமையில் உய்வுபெறுவோம்.

நல்வழிகாட்ட அல்லாஹ் போதுமானவன்.

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் அன்புத்தாயார் மற்றும் அருமைத் தந்தையாரின் அருமை பெருமைகள் பற்றியும், அவ்விருவரின் மகிமைகள் மாண்புகள் பற்றியும் எழுதப்பட்ட நூல்கள்:

١. الانتصار لوالدى النبى المختار. صلى الله عليه وسلم. للسيد المرتضي الزبيدى.

٢. تحقيق آمال الراجين فى أن والدى المصطفى. صلى الله عليه وسلم. من الناجين، لابن الجزار.

٣. التعظيم والمنة فى أن أبوى المصطفى. صلى الله عليه وسلم. فى الجنة للإمام السيوطى.

٤. حديقة الصفا فى والدى المصطفى. صلى الله عليه وسلم. للإمام السيد مرتضى الزبيدى.

٥. الدرج المنيفة فى الآباء الشريفة للإمام السيوطى.

٦. ذخائر العابدين فى نجاة والدى المكرم سيد المرسلين. صلى الله عليه وسلم. للأسبيرى.

٧. مرشد الهدى فى نجاة أبوى المصطفى. صلى الله عليه وسلم. لوحدى الرومى.

٨. مسالك الحنفا فى والدى المصطفى. صلى الله عليه وسلم. للإمام السيوطى.

٩. مطلع النيرين فى إثبات نجاة أبوى سيد الكونين. صلى الله عليه وسلم. للمنينى.

١٠. نشر العلمين المنفين فى إحياء الأبوين الشريفين للإمام السيوطى.

١١. هدايا الكرام فى تتريه آباء النبى. صلى الله عليه وسلم. للبديعى.

١٢. أمهات النبى. صلى الله عليه وسلم. للمدائنى.

١٣. الأنوار النبوية فى آباء خير البرية. صلى الله عليه وسلم. للرفيعى الأندلسى.

١٤. بلوغ المآرب فى نجاة أبوى المصطفى. صلى

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

الله عليه وسلم. وعمه أبي طالب للأزهرى اللاذقى.

١٥. بلوغ المرام فى آباء النبى. صلى الله عليه وسلم. لإدريس بن محفوظ.

١٦. تأديب المتمردين فى حق الأبوين، لعبد الأحدبن مصطفى الكتاهى السيواسى.

١٧. الردعلى من اقتحم القدح فى الأبوين الكريمين للبخشى.

١٨. سداد الدين وسداد الدين فى إثبات النجاة والدرجات للوالدين، للبرزنجي.

١٩. قرة العين فى ايمان الأبوين للدوايخى.

٢٠. القول المختار فيما يتعلق بأبوى المختار. صلى الله عليه وسلم. للديربى.

٢١. المقامة السندسية فى الآباء الشريفة المصطفوية، للإمام السيوطى.

٢٢. الجواهر المضية فى حق أبوى خير البرية. صلى الله عليه وسلم. للتمرتاشي.

٢٣. سبيل السلام فى هكم آباء سيد الأنام. صلى الله عليه وسلم. لمحمدبن عمر البالي.

٢٤. أخبار آباء النبى. صلى الله عليه وسلم. للكوفى ذكره فى (الذريعة).

٢٥. أنباء الأصفياء فى حق آباء المصطفى. صلى الله عليه وسلم. للرومى الأماسى.

٢٦. تحفة الصفا فيما يتعلق بأبوى المصطفى. صلى الله عليه وسلم. للغنيمى.

٢٧. رسالة فى أبوى النبى. صلى الله عليه وسلم. للفنارى.

٢٨. سبيل النجاة للسيوطى.

٢٩. آباء النبى. صلى الله عليه وسلم. لابن عمار.

٣٠. السيف المسلول فى القطع بنجاة أبوى الرسول. صلى الله عليه وسلم. لأحمد الشهرزورى.

٣١. خلاصة الوفا فى طهارة أصول المصطفى. صلى الله عليه وسلم. من الشرك والجفالمحمد بن يحي بن الطالب.

٣٢. مباهج السنة فى كون أبوى النبى. صلى الله عليه وسلم. فى الجنة لابن طولون.

٣٣. سعادة الدارين بنجاة الأبوين لحمد على بن حسين المالكى.

٣٤. القول المسدد فى نجاة والدى سيدنا محمد. صلى الله عليه وسلم.لمحمد بن عبدالرحمن الأهدل.

٣٥. نخبة الأفكار فى تنجية والدى المختار. صلى الله عليه وسلم. لمحمد بن سيد إسماعيل الحسنى.

٣٦.إيجاز الكلام فى والدى النبى. صلى الله عليه وسلم.

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

لمحمد ابن محمد التريزى.

٣٧السبيل الجلية فى الآباء العلية للسيوطى.

٣٨. كنى آباء الرسول. صلى الله عليه وسلم. لابن الكلبى.

٣٩. أسماء أجداد النبى. صلى الله عليه وسلم. للبرماوى.

٤٠. العقد المنظم فى أمهات النبى. صلى الله عليه وسلم. للسيد مرتضى الزبيدى.

٤١. أمهات النبى. صلى الله عليه وسلم. لابن المدينى.

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

ஒரு கேள்வி -

இந் நூ-ல் கூறபட்டுள்ள ஹதீஃத்களில் சில பலவீனமானவை என வஹ்ஹாபிகள் கூறினால் அவர்களுக்கு நாம் விடுக்கும் கேள்வி:

வஹ்ஹாபிகளே! பலவீனமான ஹதீஃதை சான்றாக அமைத்து ஏன் தொழுகையில் நெஞ்சின் மீது கைகட்டுகிறீர்கள்? அந்த பலவீனமான ஹதீஃத் இதுதான்:

حَدَّثَنَا يَحْيَىٰ بْنُ سَعِيْدٍ عَنْ سُفْيَانَ حَدَّثَنِي سِمَاكٌ عَنْ قَبِيْصَةَ بْنِ هُلْبٍ عَنْ اَبِيْهِ قَالَ رَأَيْتُ النَّبِيَّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَنْصَرِفُ عَنْ يَمِيْنِه وَعَنْ يَسَارِهِ وَرَأَيْتُهُ قَالَ يَضَعُ هٰذِهِ عَلٰى صَدْرِهِ (رواه احمد)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வலது பக்கமும் இடது பக்கமும் திரும்பும் போது பார்த்தேன், (தொழுகையில்) நெஞ்சின் மீது இக்கையை வைப்பதையும் பார்ததேன்,

அறிவிப்பாளர் - ஹுல்ப் ரழியல்லாஹு அன்ஹு

நூல்: அஹ்மத்-எண்: 20961

இந்த ஹதீதின் அறிவிப்பாளர் வரிசையில் சிமாக் என்பவர் வருகிறார். இவரைப்பற்றி ஹதீஃத் கலை வல்லுனர்கள் பல்வேறு கருத்துக்களை கூறியுள்ளனர், நம்பகமானவரென்று நிறையை மட்டுமே கூறியவர்களுமுண்டு, இவ்வாறு

கூறியவர்கள் எண்ணிக்கையில் மிகமிக சொற்பமானவர்கள், இவருடைய குறை-நிறை இரண்டையும் கூறியவர்களும் இருக்கிறார்கள், இவர்களும் குறைந்த எண்ணிக்கையில் உள்ளவர்களே, சிமாக் பலவீனவர், அவருடைய ஹதீஃதை ஆதாரமாக ஏற்கக்கூடாது என்று குறைமட்டுமே சொன்ன ஹதீஃத் கலை அறிஞர்கள்தான் ஏராளம்,

நிறை கண்டோர்

١ . قال ابو حاتم صدوق ثقة

1. சிமாக் உண்மையாளர், நம்பத்தகுந்தவர் -அபூ ஹாதிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

குறை நிறை கண்டோர்

١ . قال يعقوب بن شيبة قلت لابن المديني رواية سماك عن عكرمة فقال مضطربة

1.இக்ரிமா வழியாக சிமாக் அறிவிப்பது தடுமாற்றமுள்ளதாகும்.

- இப்னுல் மதீனீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٢ . قال يعقوب وروايته عن عكرمة خاصة مضطربة وهو في غير عكرمة صالح وليس من المتثبتين.

2. இக்ரிமா வழியாக சிமாக் அறிவித்த ஹதீஃத் மட்டுமே தடுமாற்றத்திற்குரியது. மற்றவர் வழியாக அவர் அறிவித்தவை நல்லவை. ஆனால் சிமாக் உறுதியான நிலைப்பாட்டுக்குரியவரல்ல.

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

-யாகூப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٣. قال العجلي بكري جائز الحديث الاانه كان فى حديث عكرمة ربما وصل الشيئ

3. சிமாக் அறிவிக்கும் ஹதீதை ஏற்று கொள்ளலாம்.ஆனால் இக்ரிமா வழியாக அவர் அறிவிப்பதை ஒப்புக் கொள்ளக் கூடாது. காரணம், இக்ரிமா கூறியதை (இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்) சொன்னதாக அறிவித்துவிடுவார்.

- இஜ்லீ பக்ரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٤. قال النسائي ليس به بأس وفي حديثه شيٌ

4. சிமாக் என்பவர் பரவாயில்லை என்று சொல்லத்தக்கவரே. அவர் அறிவிக்கும் ஹதீதில் பலவீனமுண்டு.

-நசாயீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٥. قال ابن عدى احاديثه حسان وهو صدوق لابأس به

5. சிமாக் அறிவிக்கும் ஹதீத்கள் அழகானவை. ஆனால் அவர் பரவாயில்லை என சொல்லதக்க உண்மையாளர்.

- இப்னு அதீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٦. قال ابن ابي خيثمة سمعت ابن معين سئل عنه ماالذي عابه قال اسند الاحاديث لم يسندها غيره وهو ثقة

6. சிமாக் நம்பகமானவர். ஆனால் யாருமே அறிவித்திராத நபரின் வழியாகவெல்லாம் ஹதீதை அறிவிக்கும் குறைபாடு இவரிடமுண்டு.

-இப்னு மஈன் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

குறை கண்டோர்

١. قال ابوطالب عن احمد مضطرب الحديث

1. சிமாக் ஹதீத் அறிவிப்பதில் தடுமாற்றமுடையவர்

-அஹ்மத் இப்னு ஹன்பல் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٢. قال ابن عمار يقولون انه كان يغلط ويختلفون في حديثه

2. சிமாக் ஹதீத் அறிவிப்பதில் தவறிழைப்பார். அவர் அறிவிக்கும் ஹதீத் ஏற்றுக் கொள்வதில் ஹதீத் கலை அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர்.

-இப்னு அம்மார் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٣. قال زكريا بن عدي عن ابن المبارك سماك ضعيف فى الحديث

3. சிமாக் பலவீனமானவர்.

-அப்துல்லாஹ் இப்னு முபாரக் ரஹ்மத் துல்லாஹி அலைஹி

٤. قال صالح جزرة يضعف

4. சிமாக் பலவீனமுள்ளவர்.

-ஸா-ஹ் ஜஸ்ரா ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٥. قال ابن خراش في حديثه لين

5. சிமாக் ஹதீ தில் பலவீனமுண்டு.

- இப்னு கிராஷ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

٦. قال ابن حبان في الثقات يخطئ كثيرا

6.ஹதீ ீத் அறிவிப்பதில் சிமாக் அதிகம் தவறு செய்வார்.

-இப்னு ஹிப்பான் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٧. قال جرير بن عبد الحميد اتيته فرأيته يبول قائما فرجعت ولم اسأله عن شيئ

7.நான் சிமாகிடம் வரும் போது அவர் நின்ற வண்ணம் சிறுநீர் கழிப்பதைப் பார்த்தேன். அவரிடம் எதுவும் கேட்காமல் திரும்பிவிட்டேன்.

-ஜரீர் இப்னு அப்தில் ஹமீத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி.

٨. كان شعبة يضعف

8.சிமாக் பலவீனமானவர்.

-ஷுஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٩. كان الثوري يضعف بعض الضعف

9. சிமாக் சிறிது பலவீனமுள்ளவர்.

-சுஃப்யான் தவ்ரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி

(تهذيب التهذيب لابن حجر العسقلاني : ٤/٢٠٤ - ٢٠٥)

நூல்: தஹ்தீபுத் தஹ்தீப் 4-(203,205)

ஆசிரியர்-இப்னு ஹஜர் அஸ்கலானீ ரஹ்மத் துல்லாஹி அலைஹி

இமாம் தகபீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களுக்குரிய மீஜானுல் இஃதிதால் எனும் நூ-ல் கீழ்க்காணும் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

قال النسائي اذا انفرد باصل لم يكن حجة

சிமாக் தனித்து அறிவிக்கும் ஹதீ ீத் சான்றாக அமையாது.

قال عبدالله بن احمد بن حنبل قرأت بخط ابي عن رجل لم يسمه قال : كان سماك بن حرب فصيحا يزين الحديث بمنطقه وفصاحته

சிமாக் இலக்கிய நயத்தோடு பேசுபவர். தனது பேச்சாற்றல் மற்றும் இலக்கியப் புலமையின் மூலம் ஹதீ ீதை அழகு படுத்தும் வழமையுள்ளவர்.

-அஹ்மத் இப்னு ஹன்பல் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

பாகம்-2 பக்கம்-232

ஹதீ ீத் கலை அறிஞர்களில் பலர் சிமாகை குறைகண்டிருக்க ஓரிரு அறிஞர்களின் கருத்தை மட்டும் எடுத்துக் கொண்டு அரபி ஞானம் தெரியாத அப்பாவி இளைஞர்களை ஏமாற்றி நெஞ்சின் மீது கைகட்ட வைத்து அவர்களின் வணக்க வழிபாடுகளை பாழடித்துக் கொண்டிருக்கிறார்கள் வஹ்ஹாபிச முல்லாக்கள்.

அப்பாவி இளைஞர்களே ி ஆதாரபூர்வமான ஹதீ ீதை மட்டுமே பின்பற்றுவோம் என்பதில் நீங்கள் உறுதியாக இருந்தால் இப்போதி-ருந்து தொழுகையில் நெஞ்சின் மேலே கைகட்டுவதை விட்டு விடுங்கள்! ஏனென்றால், சிமாக் இடம் பெறும் ஹதீ ீத் பக்கா பலவீனமான ஹதீ ீத்.

வஹ்ஹாபிய புரோகிதர்களையே பின்பற்று வோம் என்ற நிலையி-ருந்தால் மறுமை வாழ்வு என்னாகும் என்பதை ஒரு கனம் யோசியுங்கள் ி

WWW.SAFARESUNNAH.COM
A JOURNEY TOWARDS SUNNAH ....

அறிவிப்பாளர் வரிசையில் சிமாக் இடம் பெற்ற ஹதீீதைப் பின்பற்றுவதி-ருந்து பின் வாங்க மாட்டோம், தொழுகையில் நெஞ்சின் மீது கைகட்டுவதை விடமாட்டோம் என்பதில் வஹ்ஹாபி இளைஞர்களே! நீங்கள் பிடிவாதமாக இருந்தால் இன்றி-ருந்து புதிய முறையில் நீங்கள் கைகட்ட வேண்டும்.

நெஞ்சின் மீது இருகைகளையும் வைக்கக் கூடாது. ஒரேவொரு கை மட்டுமே நீங்கள் வைக்க வேண்டும். காரணம், நெஞ்சின் மீது கைவைப்பதற்கு நீங்கள் ஆதாரமாக எடுத்த அஹ்மதிலே பதிவு செய்யப்பட்ட ஹதீீதில் ஒரு கை வைப்பதற் குண்டான வார்த்தையே இடம்பெற்றுள்ளது. ‘ஹாதிஹீ’ என்ற வார்த்தைதான் அது. அதன் பொருள் இந்த(கை) என்பதாகும். ஆகவே, நெஞ்சின்மீது வலது கையை மட்டும் வையுங்கள்! அல்லது இடது கையை மட்டும் வையுங்கள்!

அது எப்படி ஒரு கையை வைப்பது? தொழுகையில் இவ்வாறு செய்வது அழகிய நடமுறை அல்லவே என நீங்கள் கூறினால் அந்த ஹதீஃதை ஆதாரமாகக் கொண்டு நெஞ்சின்மீது கைகட்டுவதை நிறுத்திவிடுங்கள்! அதுதான் நீங்கள் நியாயவாதிகள் என்பதிந் அடையாளம்.

அவ்வாறில்லாமல் அந்த ஹதீஃதில் இடம் பெற்ற ‘நெஞ்சின்மீது’ என்று வார்தையை எடுத்துக்கொள்வோம். ‘ஒரு கை’ என்பதை விட்டுவிடுவோம் என்ற முடிவுக்கு நீங்கள் வந்தால் வஹ்ஹாபி இளைஞர்களே! உங்களின் சுயநலத்திற்காக ஹதீஃதை சிதைத்த குற்றத்திற்கு உள்ளாகுவீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்!

நேர்வழிகாட்ட அல்லாஹ் போதுமானவன்.

பகிரங்க சவால்

1. குர்ஆனை உளூஇன்றி தொடுதல்
2. நபித் தோழர்களை பின்பற்றுதல்
3. கழாத் தொழுகை
4. இறைவனுக்கு உருவம்
5. ஜகாத் கடமை வருடத்திலா? வாழ்நாளிலா?
6. அத்தஹிய்யாத்தில் விரலசைத்தல்
7. வஸீலா
8. மவ்-த் ஷரீப்
9. மறைமுக ஞானம்
10. மரணித்த பின் உயிருடன் வாழ்தல்
11. இறைவன் அர்ஷில் மட்டுமா?
12. ஜியாரத் - உரூஸ்
13. தொழுகையில் நெஞ்சின்மீது கைகட்டுதல்

போன்ற தலைப்புகளில் குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் விவாதம் செய்ய சுன்னத் வல் ஜமாத்தினரான நாங்கள் தயார்!

வஹ்ஹாபிகளே நீங்கள் தயாரா?

தொடர்புக்கு
சுன்னத் ஜமாஅத் ஐக்கியப் பேரவை
சென்னை-1.
Cell: 93822 22202